திராவிடநாடு

15—12—57 | வார வெளியீடு | விலை 16 காசு

நிலைத்து நிற்கும்!

[செ. ப. விசுவநாதன், கிருத்துவக் கல்லூரி]

இத்தரையில் தமிழ்இகழ்ந்தோர் பட்ட பாட்டை
    இயம்பிடவே எழுந்ததன்றோ சிலம்புச் செல்வம்
புத்தமுதை முறையாக வளர்த்த நல்ல
    புரவலரின் எண்ணமன்றோ மதுரைச் சங்கம்,
எத்தர்தம் இடுப்பொடித்து கொடியும் பொறித்த
    இமயத்தின் உச்சியன்றோ தமிழர் வீரம்
வித்தகராம் சாத்தனார்க்குத் தனது தலையும்
    விலையாகக் கொடுத்ததன்றோ உண்மை ஈரம்.

விண்ணோடு முகில்மறையும், விரிகடல் வற்ற
    வெண்முத்துக் குறைந்துபோகும், வளங்கொழிக்கும்
மண்ணோடு மரஞ்செடிகொடி வாடும் வரளும்
    மதியோடு தண்மையும் மாளும், காதல்
பெண்ணோடு அழிந்துவிடும், சற்றே உள்ள
    பெருவாழ்வும் நலிந்துபோகும் எனினும் அருமைப்
பண்ணோடும் இயலோடும் வாழும் தமிழோ
    பாரின்மிசை பசுமையாய் நிலைத்து நிற்கும்!

கேட்டீரா சேதி!

சென்னைக்கு மேயராக தாரா செரியன் எனும் பெண்மணி தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது யாவருக்கும் தெரியும்! ஷரீபாக இருப்பவரும் கிளப்வாலா என்கிற பெண்மணிதான்!! இப்படி, சட்டங்கள் செய்யவும் அவைகளை ஆளவும் பெண்மணிகளுக்கு சமஉரிமை தரப்படும், புது வேகம் வளரும் இச்சமயத்தில், மதுரை பாண்டியன் பாங்கியினரும் ஒரு புது முயற்சியில் ஈடுபடப் போகிறார்களாம். மேற்படி பாங்கின் 48-வது கிளை, பெண்களாலேயே நிர்வகிக்கப்படப் போகிறதாம். சிக்கனம், சேமிப்பு கணக்கு முதலிய குணங்கள் இயற்கையாகவே அமைந்த பெண்களுக்கு இந்த பாங்கி மிக்க ஊக்கம் அளிக்கவே செய்யும்! இந்த முயற்சியிலீடுபடும் பாங்கியின் மானேஜிங் டைரக்டர் எஸ். என். கே. சுந்தரத்தைப் பலர் பாராட்டியிருப்பதில் வியப்பென்ன!!

*

அணுகுண்டு போன்ற ஆயுதங்கள் தயாரிப்பதை வருகிற 1958 சனவரியோடு தாங்கள் நிறுத்திக்கொள்ளத் தயார் என்றும், ஆனால் அதேபோல அமெரிக்காவும் பிரிட்டனும் செய்வதாக ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும் ருசியப் பிரதமர் புல்கானின், நேரு பண்டிதருக்கு ஒரு கடித மூலம் தெரிவித்திருக்கிறாராம். இந்தக் கருத்துக்கள் அடங்கிய கடிதம், அமெரிக்கத் தலைவர் ஐசனோவருக்கும் அனுப்பப்பட்டிருக்கிறதாம், ருசியாவிலிருந்து.

*

"நல்ல சகுனம் பார்ப்பது நாட்டு முன்னேற்றத்துக்கு உதவாது. இது மிக மிக அறிவீனமான செயல்", என்று கான்பூரில் நவ. 29-ந் தேதி நேரு வெளியிட்டிருக்கிறார். நட்சத்திரங்களையும் சந்திரனையும் பார்த்து கணக்கிட்டு காரியங்களை நடத்த முயலுவது மிகவும் மூடத்தனமானது—புதிய சந்திரன்களும், நட்சத்திரங்களும் வானத்தில் உதயமாகிக் கொண்டிருக்கும்போது நாள் நட்சத்திரத்தைக் கணக்கிட்டு செயலில் இறங்குவதால் என்ன பலன்?—இவைகளைப் பார்த்து எந்த நாடு முன்னேறியிருக்கிறது?—என்றும் நேரு கேட்டிருக்கிறார்!!

*

"கொள்ளைக் கூட்டத்தினருக்கும் சர்க்கார் அதிகாரிகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்துவருகிறது. அதன் காரணமாக கொள்ளைக் கூட்டத்தினர் சலுகையோடு தங்கள் தொழிலை நடத்திவருகின்றனர். கொள்ளைக் கூட்டத்தினருக்கு அதிகாரிகள் மறைமுகமாக உதவி செய்கின்றனர். இதனைத் தடுக்கவில்லை." எங்கு தெரியுமா, இது! எல்லாம் வல்ல காங்கிரசாட்சியில்தான்!! மத்திய பிரதேச முதன்மந்திரியான கே. என். கட்ஜூ மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. குற்றச்சாட்டிற்கு ஆதாரமாக ஒரு மாவட்ட போலீஸ் அதிகாரி ஒருவருக்கு எழுதிய கடிதத்தின் புகைப்படத்தை சட்டசபையில் எடுத்துக் காட்டினாராம்! இது பரபரப்பை உண்டுபண்ணியதாம்!! வழக்கம்போல், நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வியுற்றதென்றாலும், மாநில முழுமையும் இதுபற்றியே பேச்சாக உள்ளதாம்.

*

ஆதித் திராவிடப் பழங்குடி மக்களுக்கு ஏராளமான நன்மைகளைச் செய்து வருவதாகக் காங்கிரஸ் சர்க்கார் பிரமாதப்படுத்துகிறார்களல்லவா? இதன் வண்டவாளத்தை டில்லியிலிருக்கும் "அரிஜன இலாகா கமிஷனர்" அண்மையில் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் வெளிப்படுத்தியுள்ளார். "தீண்டாமைப் பிரச்னை நேரான முறையில் அணுகப்பட்டிருந்தபோதிலும், இதற்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகளால் குறிப்பிடத்தக்க பலன்கள் கிட்டவில்லை. பொது இடங்கள், ஓட்டல்கள், முடிவெட்டும் சலூன்கள் ஆகியவற்றில் அனுமதிப்பதும்; ஆலயங்களில் பிரவேசிப்பதும்; வீடுகள் சம்பந்தமாக ஒதுக்கிவைப்பதும் எந்தளவுக்கு வெற்றி தந்திருக்கிறது என்று தெரியவில்லை" என்று தெளிவாக அவர் 'சர்டிபிகேட்' தந்திருக்கிறார்! அதிகாரியே வழங்கும் நற்சான்று, பலரது கண்களைத் திறந்துவிடக் கூடும்!!

*

மத்தியபுள்ளிவிவர சேகரிப்புஸ்தாபனம் மத்திய சர்க்கார் சிப்பந்திகள் சம்பந்தமாக நடத்தியுள்ள (1955 ஜூன் 30-ம் தேதியன்று) கணக்கெடுப்புப்பிரகாரம் மத்திய சர்க்கார் சிப்பந்திகளில் 250 ரூபாய்க்குமேல் சம்பளம் வாங்கும் சிப்பந்திகளின் மொத்த எண்ணிக்கை 39,104 ஆகும். 250-ரூபாய்வரை சம்பளம் வாங்கும் சிப்பந்திகளின் மொத்த எண்ணிக்கை 15,80,243. அதற்குப் பிற்பட்ட புள்ளிவிவரங்கள் இன்னும் சேகரிக்கப்படவில்லை. இதனை நிதி மந்திரி, டி. டி. கிருஷ்ணமாச்சாரி அண்மையில் கேள்விநேரத்தில் தெரிவித்தார்.

★

நேருவின் வருகை

மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [15-12-57] தனிப் பிரதி 16-காசு [இதழ் 22

அன்பால், உலகை வெல்லலாம்! ஆணவத்தால், இன்னொரு உயிரையும் கூட வெல்ல முடியாது!!—என்கிற உத்தம நெறியை, உணர்ந்தாண்ட அசோகனின் சின்னத்தை அரசுக் கொடியில் பொறித்துவைத்திருக்கும் அன்பர் நேரு அவர்கள், உலகுக்கு, அடிக்கடி அன்பு நெறியைப் போதிக்கிறார்—அகிம்சை, சகிப்புத்தன்மை, அன்பின் வெற்றி ஆகியவைகளைப் பற்றி எடுத்துரைக்கிறார். ஆனால், தென்னாட்டுக்கு வந்து, திரும்பும்போதுமட்டும், அவர் தென்றலாகயிருப்பதில்லை! தீயாகிவிடுகிறார்!! சில சமயங்களில், தான் யார் என்பதையும் மறந்து, ஏதேதோ பேசிவிடுகிறார்.

பெரியார் அவர்கள்மீது, நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது. பெரியார் என்ன பேசினார், என்பதைக் கண்டுபிடிக்கும் பொறுப்பு, நீதியின் கரத்திலே இருக்கிறது. இச்சமயத்தில் இங்கு வந்த நேரு அவர்கள், 'இந்தியாவைவிட்டு வெளியேற்றப்படவேண்டும்'—'வெளியில் விட்டுவைக்கக் கூடாது' — என்றெல்லாம் பேசலாமா! வழக்கு நீதி மன்றத்திலிருக்கும்போது, பொறுப்புள்ள ஒருவர் இப்படிப் பேசினால், என்ன பொருள்!!

காட்டுமிராண்டித்தனம்—முட்டாள் தனம்—பைத்யக்காரத்தனம்—இந்தியாவைவிட்டு துரத்த வேண்டும், இப்படியெல்லாம் அர்ச்சித்திருக்கிறார். பெரியாரின் தொண்டர்கள் மூவாயிரத்துக்குமேல், சிறைக் கம்பிகளுக்குள்ளே கிடக்கும் இச் சமயத்தில், இதுபோன்ற வேகமான வார்த்தைகளையா வீசுவது, நேரு? ஏன், அவர்கள் அரசியல் சட்ட எரிப்புக்குத் துரத்தப்பட்டார்கள் என்பதை அறியாரா அவர்!! அவர்கள் செய்தது பிழையாகவேயிருக்கட்டும்—அப்பிழைக்கு, பரிகாரம் தேடமுயலும் வழியா, இது. சுடுசொல்கொண்டு சுட்டுப் பொசுக்குவதுதான், தான் விரும்பும் மாற்றத்தை உண்டாக்குமென்று நேரு அவர்கள், கருதினால், நிச்சயம் ஏமாற்றமே பதிலாகக் கிடைக்கும்.

உலகில் அன்பு வெல்லுமே ஒழிய, ஆணவம் வென்றதில்லை! தவறு செய்தவர்களையும், சரியான பாதைக்கு அழைக்கச் செய்யலாம், அன்பினைக் காட்டி. நீர் செய்வது தீது, இப்படியெல்லாம் பேசுவது நல்லதல்ல, என்று எடுத்துக்காட்டலாம். எனினும் அக்கினி மலைபோல், அனற் பிழம்புகளைக் கொட்டிச் சென்றிருக்கிறார், அவர்! தென்னாட்டவர் என்றாலே, இப்படியொரு அலட்சியம் அவருக்குச் சொந்தமாயிருக்கிறது!!

வடக்கேயுள்ள சீக்கியர் தலைவர் தாராசிங், டில்லி மீதே படையெடுப்பேன் என்றார். பஞ்சாபில், பலமுள்ள சீக்கியர் தலைவர் அவர். கட்டளையிட்டால் அவரது குரல்கேட்டு, களம் நோக்கிச் செல்ல, காளையர் உண்டு. அந்தத் தாராசிங்கை அழைத்து, குறைகளைக் கேட்க முயற்சித்ததுண்டு, நேரு. அதுபோல, திராவிட கழகத் தலைவரையும் கூப்பிட்டுப் பேசி, அவர் மனதையும் அன்பால் மாற்ற முயன்றிருக்கலாமே! பெரியார் அவர்கள், இதுபோன்ற சந்திப்புகள் என்றால், வேண்டுமென்றே மறுத்துவிடக் கூடிய சுபாவம் கொண்டவருமல்ல—தனது கோரிக்கைக்குப் பலம் கிடைக்கும், வழிகளை எளிதில் அடைத்துவிடக் கூடியவருமல்ல — அவரைச் சந்தித்து, "ஐயா! புத்தர் நெறியைப் போற்றுவதாக நீர் சொல்கிறீர். மகிழ்கிறேன். அப்படி புத்தரைப் போற்றும் உமது வாயாலேயே, பார்ப்பனர்களைக் கொல்லச் சொல்வதாகச் சிலர் சொல்லுகின்றனர். என்னால் நம்ப முடியவில்லை. நீர் சொல்லியிருக்க மாட்டீர் என்றே நினைக்கிறேன். வார்த்தை வேகத்தில் அப்படி எங்காவது சொல்லியிருந்தாலும், தவறு என்று நீங்களே சொல்வீர்கள். ஏனெனில் புத்தருக்கு விழாக் கொண்டாடும் உமது மனதிலா அன்புக்கு இடமில்லாமற்போகும்," என்று கேட்டிருக்கலாம் பண்டித நேரு! நேரு சந்திக்கக்கூடாத ஒரு தலைவருமல்ல, பெரியார்!! எனினும், அந்த அன்பு வழியை விடுத்து, ஏதோ இந்தப் பகுதியில் உள்ள மக்கள் யாவரும் அரிவாளுடனும் கம்புடனுமே உலவுவதாகக் கருதிக்கொண்டு, விட்டுவைக்க முடியாது—அநாகரீகச் செயல்—அரசியல் சட்டத்தை மதியாதவர்கள் ஓடட்டும் இந்தியாவைவிட்டு — என்றெல்லாம், பேசியிருக்கிறார்! பேச்சில் வீரம் இருக்கக்கூடும்; அத்தனையும் ஆணவத்தால் ஏற்பட்டதே தவிர, வேறெனக் கருதார் நல்லோர்!!

டில்லி பாராளு மன்றத்தில் திராவிட கழகத்தினரின் அரசியல் சட்ட எரிப்பு குறித்து டிச. 4-ந் தேதி கேள்வி ஒன்று கேட்கப்பட்டபோது, உள்நாட்டு மந்திரியார் பந்த் பதில் தந்தார்:— **அரசியல் சட்டப் பிரதிகளைத் தீயை வைத்துக் கொளுந்தி, திராவிடக் கழகத்தினர் நடத்திய போராட்டத்தில் தமிழ் நாட்டு மக்கள் சிறிதும் அக்கறை காட்டவில்லை என்று.**

தமிழ் நாட்டு மக்கள் அக்கறை காட்டாத ஒருவரின் நடவடிக்கையை அகில உலகத் தலைவர் ஏன், இவ்வளவு பெரிது பண்ண வேண்டும்! இப்படியெல்லாம் ஏன் ஆர்ப்பரிக்க வேண்டும்! — கேட்கத்தான்

தோன்றுகிறது, நமக்கு. கொசுக்கடி! — என்று சொல்வதும், கொட்டிய பின், ஆமாம் தேள் கடி!!— என்று கத்துவதும், சகஜமாகவே இருக்கிறது, காங்கிரஸ் அரசுக்கு. பெரியாரின் ஆத்திரத்தை, மாநில அரசு செய்த புதிய சட்டம் அதிகமாக்கி விட்டது! அதன் விளைவாகவே, அவரது தொண்டர்களும், அந்தச் சட்டத்தை மீறிச் சிறைக்குச் சென்றார்கள்!! நாடு, இப்படியொரு கட்டத்திலிருக்கும்போது, நாடாளும் பொறுப்பிலிருப்போருக்கு, அன்புதான் முக்கியமே ஒழிய அதிகாரக் குரல் அல்ல.

நேரு அவர்களின் வருகை வழக்கம்போல், தமது ஆதிக்கக் குரலைக் காட்டிக்கொள்ளப் பயன் பட்டதே தவிர, அன்பு வழியைக் காட்டவில்லை. சிக்கலைத் தீர்ப்பதைவிட அதிகப்படுத்தி இருக்கிறார் அவர். அதிலும், வழக்கு, நீதிமன்றத்திலிருக்கும் போது அவர் வீசிய சொற்கள்: உள்ளபடியே அவரது பெருமைக்கு உகந்ததல்ல!!

★

பெரியவர்கள் பேசினால்!

பெரியவர்கள் இப்படிப் பேசினால், என்ன செய்வது,—என்று டில்லிப் பாராளுமன்றத்திலே, உள்நாட்டு உதவி மந்திரி தத்தார் சஞ்சலப்பட்டுக் கொண்டாராம்.

பத்து ஆண்டுகளுக்கு முன் "ஒரே ஒரு ஆண்டுக்கு மட்டும்" என்று சொல்லி, மறைந்த படேல் கொண்டு வந்த தடுப்புக் காவல் சட்டத்தை மேலும் 3 ஆண்டுகளுக்கு நீடிப்பதென்று கொண்டுவரப்பட்ட மசோதாவின போதே, இப்படிக் குறைபட்டுக் கொண்டாராம்.

பெரியவர் என்று அவர் குறிப்பிட்டது, பண்டித தாகுர்தாஸ் பர்கவா எனும் முதியவரை! "இப்படி காவல் சட்டம் ஏன்? இது நாகரிகமான நாட்டுக்கு நல்லதா. எதிர்க் கட்சிகளைத் தாக்குவதற்கென்று இப்படியே சட்டம் செய்வதா?", என்று கடுமையாகத் தாக்கினாராம், பர்கவா. அதற்குத்தான், சஞ்சலப்பட்டிருக்கிறார், அமைச்சர்! காரணம், கண்டனக் கணைகளைக் குவித்த பர்கவா, எதிர்க் கட்சிக்காரரல்ல; காங்கிரசின் முதுபெரும் கிழங்களில் ஒருவர்!!

அவரே இப்படி ஆயாசத்துடன் கண்டித்திருக்கிறாரென்றால், என்ன பொருள்? காவல் சட்டத்தின் நோக்கம் எவரையும் காரணம் ஏதும் சொல்லாமல் கொண்டுபோய்ப் பூட்டலாம், என்பதுதான். இச்சட்டத்தை முதன் முதலில் பிரரேபித்தபோது, பட்டேல் சொன்னார், "இப்படியொரு சட்டம் நமது சுதந்திர நாட்டுக்குத் தேவையா? என்று ஒரு இரவு முழுதும் கண் விழித்தபடி யோசித்தேன். கம்யூனிஸ்டுகளின் நடவடிக்கைகளை எண்ணி, வேறு வழியில்லாததால் இம்முடிவுக்கு வந்தேன்", என்றார். பட்டேல், இரும்பு மனிதர், என்று கருதப்பட்டவர்! அவரே இவ்வளவு சஞ்சலத்தோடு கொண்டுவந்த சட்டம் இது!!

அந்தச் சட்டத்தை மீண்டும் நிறைவேற்றியிருக்கிறார்கள்—இதனை எதிர்க் கட்சியினர், எதிர்த்தார்கள்—காங்கிரஸ்காரர்களும் கண்டித்தார்கள்—கடைசியில், இச்சட்டம, வழக்கமபோல் நிறைவேற்றப் பட்டுவிட்டது. வெட்கம்! வெட்கம்!! — என்கிற கூச்சலுடன், வெளிநடப்புச் செய்தனராம், எதிர்க் கட்சி உறுப்பினர்கள்.

நேரு அவர்களின் அகராதிப்படி, இப்படியொரு ஆள் தூக்கிச் சட்டம் நீடிப்பது, காட்டுமிராண்டித்தனம—அநாகரிகம்—என்றே சொல்லவேண்டும். ஏனெனில் எந்த நாகரீக அரசும் இப்படியொரு சட்டத்தை நிறைவேற்றி வைத்துக்கொண்டு, 'ஜனநாயகம்' பேசாது! தைரியமாக 'நீதிமான்' என்று கூறிக் கொண்டு உலவாது!! ★

நாஞ்சில் மாவட்ட
தி. மு. கழக
2-வது மாநாடு
டிசம்பர்
27, 28-ம் நாட்களில்
நாகர்கோவிலில் நடைபெறும்.

டில்லி பாராளுமன்ற உறுப்பினர்
ஈ. வெ. கி. சம்பத்
தலைமை தாங்குகிறார்.

மதுரை—டாக்டர்
எஸ். அருணாசலம்
மாநாட்டைத் திறந்து வைக்கிறார்.

அண்ணா,
பொதுச்செயலாளர்
நெடுஞ்செழியன்
மற்றும் இயக்க முன்னணி வீரர்கள் அனைவரும் கலந்துகொள்கின்றனர்.

இரு நாட்களிலும் இசை அரங்கு, நாடகம் ஆகியவை உண்டு.

வரவேற்புக் குழு.

பிரிட்டனில் கல்வி முறை

கல்வியில் சீர்திருத்தம் என்று இன்று பேசாதவர்கள் இல்லை. தொழிலின் மேன்மையை உணர்த்துகின்றோம் என்று இன்று நம் நாட்டில் மாணவர்களின் வாழ்க்கையில் பல சோதனைகள் நிகழ்த்தப்படுகின்றன. இந்த நிலையில் இங்கிலாந்து நாட்டின் கல்வி முறையை அறிவது நமக்குப் பயன் விளைக்கக் கூடும். மாறுதல்களை எப்படிச் செய்வது பயனுடையது என்பதனை இக்கட்டுரை விளக்கும்.

*

மக்கள் அனைவருக்கும் தொடக்கக் கல்வி வழங்குவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள நாடுகள் பல உண்டு. ஆனால் பிரிட்டனில் சென்ற நூற்றாண்டிலேயே கட்டாயக் கல்விமுறை அமுலுக்கு வந்துவிட்டது. 1870ல் கட்டாயக் கல்விச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. 1901ல் ஐந்து வயதுக்கு மேல் பதின்மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இலவசக் கல்வி அளிக்கும் நிலை வந்தது. சில ஆண்டுகளில் பதினான்கு ஆண்டு வரையில் ஒவ்வொரு குழந்தையும் கல்விகற்கவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

1944-ஆம் ஆண்டுக் கல்விச் சட்டம் கல்வித் துறையில் புரட்சிகரமான மாறுதலைச் செய்தது. இதன்படி பள்ளி வயது பதினைந்தாக உயர்ந்தது. உரிய நேரத்தில் இதைப் பதினாறாக உயர்த்தவும் வகை செய்யப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தினால் ஒவ்வொரு குழந்தைக்கும் திட்டமிட்ட உயர் நிலைக்கல்வி இலவசமாகக் கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

பிரிட்டனில் கல்வி நிர்வாகம் 'ஸ்தல ஸ்தாபனங்'களிடமிருக்கிறது. ஆனாலும் தனியார் முயற்சியில் நிர்வகிக்கப்படும் கல்வி நிலையங்களும் உண்டு. இந்தக் கல்வி நிலையங்களில் போதனைக் கட்டணம் வசூலிக்கிறார்கள். செயலுள்ளவர்கள், தங்களுடைய குழந்தைகளை இந்தப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புகிறார்கள். பெரும்பான்மை மக்கள் தேசிய கல்வி நிர்வாக நிலையங்களில்தான கற்கிறார்கள்.

புதிய கல்வித் திட்டத்தில் தொடக்க நிலை, உயர் நிலை என இரு பிரிவுகள் உள. வயது, ஈடுபாடு, ஆற்றல் இவற்றுக்கேற்றபடி, குழந்தைகளுக்கு போதனை தரும் முறையில் இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டது.

மன மலர்ச்சி:

குழந்தைகளுக்குப் பதினோரும் வயதில் மன நிலை மாறுவதாக அறிஞர்கள் கூறுகிறார்கள். அந்த வயதில்தான் ஒரு குழந்தைக்கு சுவையும் குணமும் பிடிபடுகிறது; அதன் ஆற்றல் வெளிப்படுகிறது. தனக்கெனச் செய்துகொள்ளும் நிலை தோன்றுகிறது. ஆகவே, பிரிட்டனில், தொடக்கக் கல்வியை முடிக்கப் பதினோரும் வயதையே எல்லையாக நிர்ணயித்திருக்கிறார்கள். தொடக்கப்பள்ளிகள் எழுதப் படிக்கக் கற்றுத்தருவதுடன், கணக்கு, நிலவியல், வரலாறு, இயற்கை நூல் இவை பற்றிய தொடக்கப் பாடங்களைக் கற்பிக்கின்றனர். உதைபந்தும் கிரிக்கெட்டும் வேறுபல விளையாட்டுக்களும் விளையாட வசதி செய்திருக்கிறார்கள்.

தொடக்கக் கல்வி முடிவுத் தேர்வில் ஆங்கிலமொழி—இலக்கணம் கணக்கு, பொது அறிவு ஆகியவை தானுண்டு. இந்தத் தேர்வில் முடிவு, பள்ளி அதிகாரிகள் தயாரிக்கும் வளர்ச்சி அறிக்கை-இவற்றைக் கொண்டே ஒரு குழந்தையின் எதிர்காலக்கல்வியைப்பற்றிச் சிந்திக்கிறார்கள். உயர்நிலைக் கல்வியும் இலவசம்தான் என்றாலும், குழந்தையின் திறனறிந்து தேவையான கல்வி தரப்படுகிறது.

மூவகைப் பள்ளிகள்:

பிரிட்டனில் கிராமர் ஸ்கூல் (இலக்கணப் பள்ளி), மாடர்ன் ஸ்கூல் (புதுமைப் பள்ளி), டெக்னிகல் ஸ்கூல் (தொழிலியல் பள்ளி) என மூவகை உயர்நிலைப் பள்ளிகள் உண்டு. எவரும் எந்தப் பள்ளியிலும் சேரலாம், என்றாலும் சிறுவர்-சிறுமியர் தகுதியும் திறனுமறிந்து ஏற்ற பள்ளிக்கு அனுப்புகிறார்கள். எல்லாப் பள்ளிகளிலும் ஆங்கிலம், வரலாறு, பூகோளம, கணக்கு, விஞ்ஞானம் ஆகியவற்றில் பொதுவான போதனையளிக்கப்படுகிறது. சிறப்புப் போதனையில்தான மாறுதலுண்டு.

படிப்பில் ஆர்வமுள்ளவர்களும் கல்லூரிப் படிப்பை விரும்புவோரும் (கிராமர்ஸ் கூலில்) சேருகிறார்கள். இலக்கணப் பள்ளியில் கல்லூரிப் படிப்பை முடித்துக்கொண்ட பிறகு இவர்கள், வழக்கறிஞர், ஆசிரியர், டாக்டர், ஆராய்ச்சியாளர், பத்திரிகையாளர், சர்க்கார் ஊழியர்என ஏதாவதுதொழிலேற்று வாழ்க்கையைத் தொடங்க முடியும். ஆனால் எல்லாக் குழந்தைகளுக்கும் கல்லூரிப் படிப்பு தர முயலுவது தேவையாகாது. சில சிறுவருக்குப் பொறியியலில் மனம் செல்லக்கூடும். சிலருக்கு வாணிபத் துறையில் அக்கறையிருக்கலாம். அவர்களைக் கல்லூரிகளில் படிக்கும்படி வற்புறுத்துவதில் பயனில்லை. கல்லூரிப படிப்பை விரும்பாமல், வாழ்க்கைக்குவேண்டிய கல்வியை விரும்புவோருக்கு புதுமைப் பள்ளி (மாடர்ன் ஸ்கூல்) இடமளிக்

கிறது. விஞ்ஞான வளர்ச்சியுள்ள இந்நாளில் அனுபவக் கல்வியும் அவசியம். இந்த உயர்நிலைப் பள்ளிகளில் பொதுப் பாடங்களுடன், தச்சுவேலை, பீங்கான் செய்தல், உலோகவேலை ஆகிய துறைகளில் மாணவர்களுக்குப் பயிற்சி தரப்படுகிறது. பெண்களுக்கு, சலவைத் தொழில், சமையல், பின்னல்-தையல் போன்ற குடும்பப் பாங்கில் பயிற்சியளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சியினால், பள்ளியிலிருந்து வெளியேறுங் காலத்தில் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் அறிவுத் திறனும் கைத்திறனும் பெற்று விளங்குகிறார்கள்.

டெக்னிகல் ஸ்கூல் என்ற தொழிற் பயிற்சிப் பள்ளிகளில் கைத்திறன்முதலிடம்அளிக்கப்படுகிறது, இங்குபொறியியலைத் தவிர வாணிபத்தையும் விவசாயத்தையும் தொழில்களாகக் கருதி, அனுபவ போதனை தரப்படுகிறது. தொழிற்றுறையில் விருப்பமுள்ள மாணவிகள் இந்தப் பள்ளிகளில் சேர்ந்து கல்வி கற்கிறார்கள்.

இம் மூவகைப் படிப்பும் வெவ்வேறு பள்ளிகளில்தான்போதிக்க வேண்டுமென்பதில்லை. நடத்துவோர் விரும்பினால் ஒரே பள்ளியில் மூன்று பிரிவுகளாக, மூவகைப் போதனைகளையும் தரலாம். தேவைக்கும் வாய்ப்புக்குமேற்ற படி, இவற்றைக் கல்விக் கழகங்கள் நடத்தி வருகின்றன.

ஒவ்வொருவரும் பதினைந்து வயது வரையில் பள்ளியில் படிக்க வேண்டுமென்ற கட்டாயமிருந்தாலும், விரும்பினாலோ, தேவையிருந்தாலோ, மேலும் ஒன்று அல்லது இரண்டாண்டுகள் படிக்கலாம். பள்ளிப் படிப்பு முடிந்ததும், ஒரு சிலர் கல்லூரிகளுக்குச் செல்கிறார்கள். அங்கும் இலவச போதனையுண்டு. தகுதியுள்ளவர்களுக்குக் கல்வி மான்யமும் கிடைக்கிறது.

பல்கலைக் கழகங்கள்

பிரிட்டனில் 21-பல்கலைக் கழகங்கள் உள. இவற்றில் 16-இங்கிலாந்திலும், 4-ஸ்காட்லாந்திலும், ஒன்று வட அயர்லாந்திலும் உள. இவை தவிர இரண்டு பல்கலைக் கழகக் கல்லூரிகளும் உண்டு. பொதுவாக, கல்லூரிப் படிப்பு மூன்றாண்டுகளில் முற்றுப் பெறுகிறது. சில பல்கலைக் கழகங்களில் நான்காண்டுப் படிப்பும் உண்டு. வைத்தியப் படிப்புக்கு ஐந்து அல்லது ஆறு ஆண்டுகள் செலவிட வேண்டும். டாக்டர் போன்ற சிறப்புப் பட்டம் பெற ஆராய்ச்சி வேண்டும். இதற்கான வசதிகளும் பல்வேறு பல்கலைக் கழகங்களில் உண்டு. எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் கலை விஞ்ஞான போதனையும், உயர்தர விஞ்ஞான போதனையும் தரப்படுகிறது. ஆக்ஸ்ஃபோர்டு, கேம்பிரிட்ஜ் போன்ற பல்கலைக் கழகங்களில் தனி நபர் போதனை வசதியிருப்பதால், பலர் அந்தப் பல்கலைக் கழகக் கல்லூரிகளில் சேர்ந்து படிக்க விரும்புகிறார்கள்.

தொழில் நுட்பக் கல்வி

தொழில் நுட்பக் கல்வி போதிக்க, பிரிட்டனில், தனியாக பல்கலைக் கழகம் இல்லை. ஆனால், பல தொழிற் கல்லூரிகள் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள. இங்கு, கலைக் கல்லூரிகளைப்போல பட்டப் படிப்புக்கு முதலிடமில்லை. பயிற்சிப் படிப்புக்குத்தான் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. தொழிற் கல்லூரிகளை, பெரும்பாலும், நாட்டாண்மைக் கழகங்களே நடத்தி வருகின்றன.

தொழிற் கல்லூரிகளுக்கு பொதுவாக தொழில் நிலையங்களின் கூட்டுறவும் ஆதரவும் கிடைக்கிறது. கல்லூரி நிர்வாக அவையில், உள்ளூர்த் தொழிற்சாலைகளின் பிரதிநிதிகள் பதவி வகிக்கிறார்கள். உயர்தர தொழிற் பயிற்சிதர, ஒரு சில மத்திய நிலையங்களும், தேசிய கல்லூரிகளும் உண்டு. பொதுவாக, தொழிற் கல்லூரிகளின் நிர்வாகத்திற்கு, தொழில் நிலையங்களே நிதி உதவி அளிக்கின்றன.

இங்கிலாந்திலும் வேல்ஸிலும் சுமார் 300 தொழிற் கல்லூரிகளில் முழு நேரப் படிப்பு தரப்படுகிறது. இவை தவிர 260 கல்லூரிகளில் நாளுக்குச் சில மணி நேரம் கல்வி போதனையுண்டு. வேறு அலுவல் செய்து பிழைக்கும் இளைஞர்கள், இந்தக் கல்லூரிகளில் சேர்ந்து உயர்ந்த பதவிகளுக்குத் தகுதி பெறமுடியும்.

பிரிட்டனில் சில பகுதிகளில் சில தொழில்கள் சிறப்புற்று விளங்குகின்றன. ஆகவே, எந்தப் பகுதியில் எந்தத்தொழில்பெருக்கமடைந்திருக்கிறதோ, அதற்கு ஏற்றபடி தொழிற் கல்லூரிகள் செயலாற்றுகின்றன.

*

இவ்வாறு பிரிட்டனில் வாழ்க்கைத் தேவையை ஒட்டி கல்வி முறை அமைக்கப்பட்டு பயன்விளைகின்றது.

உதாரணமாக, லங்காஷயர் பகுதியில் ஆடை உற்பத்தி அதிகம். அங்குள்ள போல்டன் தொழிற் கல்லூரி ஆடைத் தொழில் பயிற்சியில் தனிக்கவனம் செலுத்துகிறது. யார்க்ஷயரில் கம்பளித்தொழில் மேலோங்கியிருப்பதால் பிராட்ஃபோர்டு, ஹாலிஃபாக்ஸ், ஹட்டர்ஸ்ஃபீல்டு ஆகிய இடங்களில் கம்பளி சம்பந்தமான பயிற்சி தரும் கல்லூரிகள் செயலாற்றுகின்றன. நாட்டிங்ஹாம், லீஸ்டர் முதலிய இடங்களில் பின்னல் ஆடைகள், தொழிற் கல்லூரிகளும், கவென்ட்ரி, மாகிள்ஸ்ஃபீல்டு முதலிய இடங்களில் பட்டுத் தொழில் சம்பந்தமான தொழிற் கல்லூரிகளும் உண்டு. பிடில்ஸ் பரோவிலுள்ள கல்லூரிகள் உலோகவியல் வார்ப்படத் தொழில் பற்றியும், மெர்ஸிஸைட் செஷயர் முதலிய இடங்களிலுள்ள கல்லூரிகள் இரசாயனப் பொறியியலிலும் தனிக் கவனம் செலுத்துகின்றன. கார்டிஃப், பிளிமத்போன்ற துறைமுக நகரங்களிலுள்ள கல்லூரிகள் நாவாய்க்கலையில் அக்கறை காட்டுகின்றன. 1952ல் விமானப் பொறியியல் போதனைக்காக, ஹாட்ஃபீல்டில் தொழிற் கல்லூரி நிறுவப்பட்டது. இதில், அருகிலுள்ள டீ ஹாவிலந்து விமானக்கம்பெனியில் பணியாற்றும் பலர் மாணவராகச் சேர்ந்து பயனடைகிறார்கள். ரக்பி தொழிற் கல்லூரி மின்சார பொறியியல் போதனைக்கு பெயர் பெற்றதாகும்.

"மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்பது பழமொழி. காரணமில்லாத, அர்த்தமற்ற பயம் பலரிடமும் இருந்து வருகிறது. இதை எவ்வாறு போக்கலாம்?

நூற்றில் இருபத்தைந்து பேருக்குப் பல வகையான ஐதிகங்களும் குருட்டு நம்பிக்கைகளும் இருக்கின்றன. மனப்பிராந்தியின் விளைவாக வருந்துகிறவர்கள் இத்தகையவரே. எஞ்சிய எழுபத்தைந்து பேரிடமும்கூட ஏதாவதொன்றைக் குறித்துக் காரணமில்லாமலே பயப்படுவது வழக்கமாக இருந்து வருகிறது. இடி முழக்கம், மின்னல், இருட்டு அறைகள், உயர்ந்த இடங்கள் இவற்றுள் எதையாகிலும் ஒன்றைக் குறித்துப் பயப்படுவது உங்களுக்கோ அல்லது உங்கள் நண்பர்களுக்கோ பழக்கமாக இருக்கலாம். ஆபத்து ஒன்றும் இல்லை என்று அறிந்திருந்த போதிலும் பிரமை மட்டும் நீங்குவதில்லை.

இருட்டில் நடமாடுவதற்கும் சில குழந்தைகள் பயப்படுகிறார்கள். விளக்கை அணைத்ததுமே பயம் ஏற்படுகிறது. பெரியவர்கள் பலருக்கும்கூட இந்தப் பயம் இல்லாமல் இராது. குழந்தைப் புத்தியும் குழந்தைப் பிராயத்தின் பழக்க வழக்கங்களும் வயதான பிறகும் ஒழிவதில்லை. கூடவே தான் வருகின்றன. எனவேதான் சிலருக்கு உயர்ந்த மாடிப்படி ஏறுவதென்றால் மிகுந்த பயம். வேறு சிலருக்கு ஏகாந்தமாக இருக்கும் அறைக்குள் தாங்கள் உள்ளே இருக்கையில் கதவு தானாக அல்லது காற்றினால் சாத்திக்கொண்டுவிட்டால் என்ன ஆகுமோ என்று பயம்.

இத்தகைய பயங்களுள் ஒன்றினால் பாதிக்கப்படும் பொழுது உடல் நடுங்குவதுடன், வேர்த்தும் கொட்டும். நெஞ்சுத் துடிப்பு அதிகமாகும். உடல் மிகுந்த பலவீனமாக இருப்பது போன்ற உணர்வும் ஏற்படுகிறது.

பிரசித்திபெற்ற பிரெஞ்சு தேச வீரனாகிய நெப்போலியனுக்கு பூனைகளைக் கண்டால் நடுக்கம் ஏற்பட்டு விடுவது வழக்கமாம். இது ஒரு வகைப் பயம்.

வீட்டின் மேல் மாடியிலே ஒரு பெண்மணி இருந்து வந்தாள். அவளுடைய சாமான்களைப் போடுவதற்கு மேலே இடமில்லாத காரணத்தினால் கீழ்க்கட்டில் ஒரு அறையை அவளுக்காக வீட்டுக்காரன் ஒழித்து விட்டிருந்தான். அவ்வறையில் இருந்து ஏதாவது சாமானை எடுப்பதற்கு அவள் கீழே இறங்கி வரும்பொழுதெல்லாம், முதற்காரியமாக இரண்டு பாருங் கற்களைத் தேடி, கதவுகளை விசாலமாகத் திறந்து வைத்துக் கொள்வாள். காரணம் தெரியுமோ? "கதவுகள் திடீரென்று தாமாகச் சாத்திக்கொண்டு விட்டால், நான் வெளியேறுவது எப்படி?"

"ஏன் அம்மா? இந்த அறையிலேயே தெருவைப் பார்த்தபடி இரண்டு சன்னல்கள் பொருத்தப்பட்டிருக்கிறதே? கூப்பிட்டால் யாரும் வந்து திறக்காமலா இருந்து விடுவார்கள்?"

"அது என்னவோ அம்மா, கதவு எப்படியாவது சட்டென்று சாத்திக்கொண்டால் எனக்கு உள்ளூர நடுக்கம் எடுத்துவிடும்" என்று பதில் சொன்னாள்.

அந்தப் பெண் குழந்தையாக இருந்தபோது, அவர்கள் குடியிருந்த பிரதேசத்தில் அடிக்கடி புயல் அடிக்குமாம். அப்போதெல்லாம் "புயல் பாதுகாப்பறை" என்று அழைக்கப்படும் தனியறைக்கு, அவள் அப்பா, பிள்ளைகள் அனைவரையும் தூக்கிக் கொண்டு போய்விடுவார். அவருக்குக்காட்டு இலாகாவில் வேலை. அப்பொழுதெல்லாம் அந்தப் பெண் பயமே உருவாகத்தான் காட்சியளிப்பாளாம். வீடு புயலில் விழுந்து உயிரோடே சாக நேரிடுமோ என்று எண்ணித் தவியாகத் தவிப்பாள். எனவேதான் இப்பொழுது புயல் இல்லாமல் இடி முழக்கம், மின்னல், மழை முதலியன ஏற்படுகிற பொழுதும்கூட தன்னை அறியாமலே அவளுக்கு மிகுந்த பயமும் நடுக்கமும் ஏற்பட்டு விடுமாம்.

கூட்டத்திலே தனியாக விடப்பட்ட குழந்தையும், கூட்டத்தினால் தள்ளுண்டு நெருக்கப்பட்டு மிதிக்கப்பட்டு அங்கவீனமடைந்த குழந்தையும், பெரியவர்களான பிறகும் கூட்டத்தைக் கண்டால் பயப்படுவது விந்தை அல்லவே!

ஏரிகள், ஆழமான ஆறுகள், குளங்கள், கடல் அலைகள் இவற்றைக் கண்டாலே சிற்சில நபர்களுக்குத் தத்தளிப்புத்தான். படகு ஒன்றில் ஏறச் சொல்லிவிட்டால் பாதி பிராணன் போய்விடும். ஏன், சிலரை வலுக்கட்டாயமாகத் தூக்கி யெறிந்தாலன்றித் தாமாக ஏறமாட்டார்கள். அத்தகையவர்களுள் ஒருவரை படகில் ஏற்றினால், அதன் விளைவாக மூர்ச்சை போடுவதும் உண்டு. இவ்வாறே உயர்ந்த படிக்கட்டுள்ள மாடிக் கட்டிடங்களில் ஏறியிருக்க விரும்பாதவர்களும் பாதிக்கப்படுகிறார்கள்.

"என் இளைய மகளுக்கு வயது 18. அவளுக்குச் சிலந்தியைக் கண்டாலே மிகுந்த பயம். சிலந்தி சுவரில் அல்லது கூரையில் உட்கார்ந்திருந்தாலுமே, அவள் அந்த அறையை விட்டு ஓடிவிடுவாள். யாராவது வந்து, அதைக் கொல்ல வேண்டும். அவள் சின்னக் குழந்தையாக இருந்தபோது, "கருஞ்சிலந்தி கடித்தால் ஆட்கள்

இறந்து போவார்கள்'' என்று தாத்தா அவளிடம் கூறி வைத்திருந்தார். முதல் நாள் அதைக் கண்டதும் அவரிடம் அவள் இரைக்க இரைக்க ஓடிவந்தாள். தாத்தா தீக்குச்சி ஒன்றைப் பற்ற வைத்து அதைச் சுட்டுக் கொன்ருர். இது நடந்து எத்தனை வருஷமோ ஆகிவிட்டது. அன்றைக்கு கருஞ்சிலந்தியை அவள் பார்த்தது ரோஜாச் செடியில். இன்றுவரை அவள் ரோஜாச் செடியினிடம் தனியாகப் போக மாட்டாள். அத்தனை பயம்!'' இதுதான் "பூச்சிப் பயம்."

"என்னுடைய நண்பனொருவன் அன்னிய புருடர் மத்தியில் வரவே கூச்சப்படுவான். இந்தக் காலத்துப்பெண்கள்கூடக் கூச்சத்திற்கு அவனிடம் சிறிது பிச்சை வாங்க வேண்டியதுதான். உடல் குழைந்துமுகம்கூடப் பெண்களைப் போலவே சிவந்து விடுகிறது! குதிரை அணிவகுப்பு, ஆட்டு மந்தை, மாட்டு மந்தையினருகே போவதற்குக் கொஞ்சமும் பிடிக்காத ஒரு பெண் பிள்ளையை எனக்குத் தெரியும், அவள் குழந்தையாக இருந்தபொழுது அணிவகுப்பு நடப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கையில், முரட்டுக் குதிரையொன்று அவள் காலை மிதித்துவிட்டது தான் இதற்குக் காரணம். இதை "மிருக பயம்'' என்று கூறுவோர். இதே பெண்ணை தேனீ ஒன்று ஒரு முறை கொட்டிவிட்டது. எனவே தேனீ, குளவி என்ருலே அவளுக்கு உண்டாகும் பயத்திற்கு அளவில்லை. அவளுக்குச் சொந்தக் கார் இருக்கிறது. தானே ஓட்டிக்கொண்டு போவாள். தேனீ அல்லது குளவியைக் காரின் ஜன்னலுக்கு வெளியே கண்டுவிட்டால்கூட காரை நிறுத்தி, வழிப்போக்கரில் யாரையாவது அதை விரட்டும்படி கெஞ்சுவாள். சமயா சமயங்களில் அது காரினுள்ளேயே நுழைந்து விடுவதுண்டு.

நான் சிறு குழந்தையாக இருந்தபோது, எங்கள் மாமா ஒருவர் எங்கள் வீட்டிலேயே வாசம் செய்து வந்தார். நான் விஷமம் செய்யும்போதெல்லாம், பழைய துணி வாங்குகிறவனிடம் என்னை விற்றுப் போடுவதாக அவர் கூறிப் பயமுறுத்துவார். பழைய துணி வாங்குகிறவனை வாசலில் பார்த்ததுமே நான் ஓடிப்போய் சமையல் அறையில் ஒளிந்துகொள்ளுவேன். "இதோ வந்திருக்கிருன் பழைய துணி வாங்குகிறவன். அந்தக் குட்டி எங்கே?'' என்று அவர் கேட்டு, என்னைத் தேடிக் கண்டுபிடிக்க முயலுவார். அந்த மாமாவின் பெயர் வரதராஜன். இன்றைக்கும் வரதராஜன் என்ற பெயர் என் காதில் விழுந்ததுமே. இலேசான பரபரப்பும அமைதியின்மையும் எனனிடம் உண்டாகி விடுகிறது. இதைத் தான் "பெயர்ப் பயம'' என்று அழைப்பார்கள்.

இரண்டாவது உலக மாகா யுத்தத்தின்போது ஜப்பானியர் நேச நாடுகளைச் சேர்ந்த வெள்ளையரை மனிதத்தன்மையின்றி இம்சித்து சித்திரவதை செய்ததின் காரணமாக அவர்களுடைய வீரர்களில் அநேகருக்கு புத்தி சுவாதீனமே இல்லாது போயிற்ரும். இவர்களில் பலர் சிறைக் கைதிகளாக இருந்தவர்கள். நேச நாடுகளுக்கு வெற்றி கிடைத்த பிறகும் இவர்கள் சொந்தநாடு திரும்புமுன்பாக இவர்களுடைய பைத்தியத்தைத் தெளிவிக்கிறதற்காக பலர் பெங்களூருக்கு அருகிலுள்ள ஜலஹள்ளி ஆஸ்பத்திரிடவுனுக்கு கொண்டுவரப்பட்டார்கள். அடிக்கடி இந்தச் சிறைக்கைதிகள் எங்கு போகிரோம் என்று தெரியாமலே அங்கும் இங்கும் போய்க்கொண்டிருப்பார்கள். ஜப்பானியர் கையில் அகப்படாமல் தப்பி ஓடுவதாக அவர்களுடைய எண்ணம். தூரத்திலிருந்து யாராவது "ஜப்பான்'' என்று அந்த ஒரே வார்த்தையைச்சத்தமாகக்கூறிவிட்டால் போதும். அங்கிருந்து திரும்பிப் பாராமல் தலை தெறிக்க ஓடுவார்களாம். யாராவது இது இங்கிலீஷ் பட்டாளத்தைச் சேர்ந்த பிரதேசம் என்று கூறினுல் மட்டுமே நின்று மூச்சுவிடுவார்கள். பாவம்! இவர்களுடைய இந்தப் பயத்தைத்தெளிவிப்பதற்காக ஜப்பானியர் போன்று பல பொம்மைகளை இவர்கள் முன்பாக வைத்துஅவற்றைக்குத்தி நிமிர்த்திக்காட்டி, ஜப்பானியன் செத்துவிட்டான், உயிர் இல்லை என்றெல்லாம் கூறி அவர்களைச் சிரிக்குமாறும், பொம்மைகளைத் தடவிப் பார்க்குமாறும் செய்து பைத்தியத்தைத் தெளிவித்து அவர்கள் அனைவரையும் நல்ல குணம் அடையும்படி செய்து அனுப்பிவைத்தார்களாம். அப்போதுஇருந்த பிரிட்டிஷ் சர்க்கார்.

என் சிநேகிதிகள் சிலருக்குப் "பாம்பு'' என்று யாராவது திடீரென்று கூறிவிட்டாலே உயிர் போய்விடும். திரைப் படத்தில் பாம்பைப் பார்த்துவிட்டு நடுங்கும் தைரியசாலிகளும் இருக்கிருர்கள்.

சில லைப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளில் மாதத்தின பதிமூன்ரும தேதிகளில் பாலிஸி பதிவு செய்வதில்லை. அந்தத் தேதியில் பதிவு செய்யும் பாலிஸிகள் கெட்டுப்போய்விடுகின்றன. அல்லது கம்பெனி பணம் இழந்துவிடுகிறதாம். இதை "தேதிப் பயம்'' அல்லது "எண்பயம்'' என்று கூறுவோம்.

என் தோழி விட்டில் அவள் ஓர் முறை மின்சார இஸ்திரிப் பெட்டியை மேஜை மீது வைத்து சுவிட்சைப் போட்டு மறுபடி அதை அணைக்க மறந்து போய்விட்டபடியால் வீட்டை தீப் பற்றிக்கொண்டது. தீ அணைக்கும் படையினர் வந்து தீயை அணைத்தார்கள். அவர்கள் செய்த அமளியையும், நெருப்பினுல் எவ்வளவு சேதமும் அபாயமும் ஏற்பட இருந்தது என்பதையும் கவனித்துக்கொண்டிருந்த அவளுக்கு இன்றைக்கும் "நெருப்பு'' என்ருலே கை கால் சுவாதீனமற்றுப் போகும்.

சிற்சில மனிதருக்கு உலோகங்களைக் கண்டாலே பிடிக்காது. அருவருப்பு உண்டாகும். மீன் உணவைக் கண்டால் பலருக்கும் அப்படியே. மாமிசஉணவும் அதே பிரகாரமாக அருவருப்பையும பயங்கரத்தையும் பலரிடம் தோற்றுவிக்கிறது.

குழந்தையாக இருந்தபோது, பழைய பாலம் ஒன்றின்மேல் கார் போய்க்கொண்டிருக்கையில் தடதட வென்ற சப்தத்துடன் பாலம் முறிந்து விழுந்ததைக் கண்ணுல் கண்டிருந்த ஒரு பெண் இன்றுவரை பாலத்தையோ, பாலத்தின் கைபிடிச் சுவரையோ அன்றி

(10-ம் பக்கம் பார்க்க)

கள்ளும் கதரும்!

நெல்லூர்
10–டிச. 1958

ஊரெல்லாம் அலங்கரிக்கப்பட்டு, மூவர்ணக் கொடிகள் எல்லாம் நகரெங்கும் நாட்டப்பட்டு, நேற்று இவ்வூர் 'ஜே, ஜே' என்று இருந்தது. காரணம், கள்ளுக் கடை திறப்பு விழா செய்யப்பட்டதுதான். உள்ளூர்க் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தலைமையில், 'க்யு' வரிசையில் நின்ற மக்களுக்கு, கள் விற்கும் விழாவை ஆந்திராவின் மந்திரியார் துவக்கிவைத்தார். பொங்கு நுரையுடன் குடங்களில் தேங்கிக் கிடந்த கள்ளை, புட்டியிலடைத்து, விற்பனையை மந்திரி துவக்கியபோது, 'மகாத்மா காந்திக்கு,' என்று சொன்னதும் மக்கள் எல்லாம் 'ஜே'!' என்று எழுப்பிய கோஷம், வானத்தைப் பிளந்தது. விழாவுக்கு வந்த மந்திரிக்கும், காங்கிரஸ் தலைவருக்கும், புதிதாக ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டித் தலைவரான பிரபல ஆப்காரிகாண்டிராக்டர் மாலைபோட்டவந்தார். அவர் தடுமாறியபடியே, மேடையில், நின்ற காட்சி வெகு அழகாயிருந்தது. இரவு, அவர் வீட்டில் விழாவுக்கு விஜயம் செய்தவர்களுக்கு எல்லாம் பலமான விருந்து நடந்தது. விருந்தில் விஸ்கி, பிராந்தி போன்ற மது வகைகள் பரிமாறப்பட்டதென்றும், அவைகளைக் குடிக்கத் தனக்குப் பழக்கமில்லையென்று மந்திரி மறுத்ததாகவும், இது தன்னை வேண்டுமென்றே அவமானப் படுத்திய விஷயமாக ஜில்லா காங்கிரஸ் தலைவர் கருதி, ஆந்திர மாகாண காங்கிரஸ் கமிட்டிக்கு அந்த மந்திரியின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு எழுதியிருப்பதாகவும், விஷயமறிந்த வட்டாரங்களில் பேசப்படுகிறது.

(நமது நிருபர்)

* * *

நாடெங்கும் காங்கிரஸ் கமிட்டித் தேர்தல்கள நடைபெறுகின்றன. 'நேற்று வந்தவர்'களெல்லாம், தலைவரும், செயலாளரும், கமிட்டி மெம்பருமாகி விட்டனர் என்கிற பேச்சும்; எம்மை எங்கே மதிப்பார்கள், தடியடிக்கும் தண்டியாத்திரைக்கும் நாங்கள் தேவைப்பட்டோம் — இப்போது பணக்காரர்களல்லவா காங்கிரஸ் கட்சிக்குத் தேவைப்படுகிறார்கள் என்கிற குமுறலும் பல இடங்களில் ஒலிக்கின்றன.

ஆந்திர மாநிலத்திலும், புதிதாகக் காங்கிரஸ்கமிட்டித்தேர்தல்கள், முடிவு பெற்று வருகின்றன. நெல்லூர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி, புதிதாக நிறுவப்பட்டது, முதல் முறையாகக் கூடியது.

புதிய கமிட்டி கூடியதும், எதைபபற்றிப் பேசியதாம் தெரியுமா? நாட்டில் ஏற்படும் உணவுச் சிக்கல்கள், அவர்களுக்கு முக்கியமானதாகத் தென்படவில்லை; ஆலைகள் வேண்டும், அதற்காவன செய்யவேண்டும் என்பது பற்றியும் விவாதித்ததாகத் தெரியவில்லை. ஏழை மக்களின் துயர், இல்லாதவர்களின் தொல்லை, ஐந்தாண்டுத் திட்டத்தை வைத்துக்கொண்டு நேருபடுகிற அவதி, இவைகளைப்பற்றியும் விவாதித்து முடிவெடுத்ததாகச் சேதிகிடைக்கவில்லை.

மதுவிலக்கு பற்றி, விவாதித்தார்களாம்! ஆமாம்—அதுவும விவாதிக்கப்பட வேண்டிய விஷயம் தானே—பக்கத்திலிருக்கும் ஒரிஸ்ஸாவில் அப்படியொரு யோசனை இருப்பதாகக் கூறப்படுகிறதே— அதனால் நெல்லூர் ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டியும் ஆலோசித்து. அப்படியெல்லாம் மது விலக்கை ரத்து செய்யக் கூடாது என்று தீர்மானம் போட்டிருக்கும் என்று நினைக்கக்கூடும்.

பழைய காங்கிரசாக இருந்தால், அப்படித்தான் செய்யும். ஆனால் இது புதிய காங்கிரசாயிற்றே! அதனால், முதல் கூட்டத்திலேயே முதல் தரமான யோசனையைச் சொல்லியிருக்கிறது. அந்தச் சேதியை 'மெயில்' ஏட்டில் கண்டோம். அடுத்த 1958-ல் அதே நெல்லூரிலிருந்து, ஒரு செய்தி வெளியானாலும், அதிசயப் படுவதற்கில்லை என்கிற எண்ணம் வந்தது. நாம் எதிர்பார்க்கும் காட்சியையே தலைப்பில் தந்துள்ளோம்.

அமைச்சர் செல்ல, ஜில்லாத் தலைவர் தலைமைவகிக்க, கள்ளுக் கடைகள் திறப்புவிழாவும் அங்கே காந்தி மகாத்மாவுக்கு ஜே என்ற முழக்கமும், கமலர் ஆட்டமும், கானக் குயில்களின் பாட்டும், நடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை! ஏனெனில், நெல்லூரிலிருந்து 'மெயில்' மூலம் வந்த சேதி இது, அதைப் பாருங்கள்:—

நெல்லூர் டிச. 8

புதிதாக அமைக்கப்பட்ட நெல்லூர் ஜில்லாக்காங்கிரஸ் கமிட்டி, இன்று முதல் தடவையாகக் கூடியது. காங்கிரஸ் எம். எல். ஏ.-யும் ஜில்லாக் கமிட்டித் துணைத் தலைவருமான எ. சி சுப்பாரெட்டியார் தலைமைவகித்தார் அதுபோது, மதுவிலக்கைக் கைவிடுமாறு ஆந்திர சர்க்காரைக் கேட்டுக்கொண்டு, ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்துக்கு ஆந்திர மாநில அமைச்சரும் முன்னாள் கமிட்டி மெம்பருமான பி. கோபால ரெட்டியும் வந்திருந்தார்.

அமைச்சர் போயிருந்திருக்கிறார்! அதிலும் கோபால ரெட்டி, 'நேற்று வந்தவரல்ல' — நீண்ட நாளைய காங்கிரஸ் தொண்டர், காந்தியடிகளின் மீது மிக்க அன்பு கொண்டவர், அவர் காட்டிய பாதையே சுத்த சன்மார்க்கம், எனும் பற்றும் மிக்கவர். அவருக்கு முன்னால், ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டி, இப்படியொரு சிபார்சைச் செய்திருக்கிறது, ஆந்திர அரசுக்கு!!

காங்கிரஸ் கமிட்டி — அதுவும், ஜில்லாக் கமிட்டி— கள்ளுக்கடை

யைத் திறந்துவிடத் தீர்மானம் போட்டு அனுப்புகிறது. மந்திரியும், இந்தத் தீர்மானம் உருவாகும்போது, கூட இருந்திருக்கிறார். தடுத்தாரா—வேண்டாம் என்று யோசனை சொன்னாரா—என்கிற விளக்கம் ஏதும் வரவில்லை. அவர் தடுத்திருந்தால், அவரையும் மீறி இப்படியொரு தீர்மானம் செய்யக்கூடியவர்களாக நெல்லூர் ஜில்லாக் கமிட்டி இருக்க முடியாது.

ஆகவே, அமைச்சரும், 'ஊம்' காட்டியிருக்கவேண்டும்; அல்லது, 'உம்' என்று முகத்தை வைத்துக்கொண்டு, இருந்திருக்கவேண்டும். கோபாலர், அப்படியிருந்திருக்க மாட்டார்; ஆகவே, அவரும், சம்மதமளித்திருக்க வேண்டுமென்றே கருதுகிறோம்.

கள் குடியைப்பற்றி காந்தியடிகள் எவ்வளவு தீவிரமாக இருந்தார் என்பது யாவருக்கும் தெரியும். கள்ளை, மது அரக்கன், என்று கூடப்பெயர் சூட்டி அழைத்தனர், காங்கிரசார்! குடிகெடுக்கும் குடி ஒழியவேண்டும்—குடியின் காரணமாக கொள்ளைப் பணம் செலவழிகிறது—குடும்பம் நசிக்கிறது, என்று கர்ச்சனை செய்தார்கள் காங்கிரஸ் தலைவர்கள்!! சமூகத்தைக் கெடுக்கும் பஞ்சமாபாதகங்களில் ஒன்றெனக் கூறப்பட்டு, குடி அறவே ஒழிக்கப்பட வேண்டும் என்றனர்.

இப்படிக் குடியை ஒழிப்பதால் குறையும் வருமானத்தை வேறு ஏதாவது 'வரி' போட்டு வசூலித்தாலும் கூடப் பரவாயில்லை, என்று பேசினர். ஏனெனில் குடியை ஒழிப்பது, காந்தியடிகளுக்குச் செய்யும் மகத்தான சேவை என்று கருதப்பட்டது.

ஆனால், இதோ ஒரு மாவட்டக் காங்கிரஸ் கமிட்டி தீர்மானம் போட்டு அனுப்புகிறது, குடியைத் திரும்பக் கொண்டு வரவேண்டுமென்று! தீர்மானம் நிறைவேற்றிய கூட்டத்தில் அமைச்சரும் கலந்துகொண்டிருக்கிறார்!!

கொள்ளை லாபம் குறைந்துபோனதால் குமுறிக் கொண்டிருக்கும் எந்த ஆப்காரி காண்டிராக்டர் இத்தீர்மானத்துக்கு காரணமோ, அறிய வாய்ப்பில்லை நமக்கு. ஆனால், ஒன்றுமட்டும் சொல்வோம், இப்படி ஒரு தீர்மானம் வரக்காரணம் சுயநலமே தவிர வேறு எதுவுமல்ல.

இன்று காங்கிரசுக்குள், காந்தியடிகளின் கொள்கையைப்பிய்த்து சின்னாபின்னம் செய்யக்கூடிய அளவுக்கு மனத்துணிவு பெற்ற புதியவர்கள் இருக்கிறார்கள்! அவர்கள், 'லாபம்' தேடி அங்கே சென்றிருக்கிறார்கள் என்பதிலும், ஐயமில்லை!-ஆகவே, இப்படி, காந்தியடிகளின் கொள்கைகளை, கால்வேறு கைவேறாகப் பிய்த்துப் பிய்த்து எறிந்தாலும் வியப்பதற்கில்லை.

இறந்துபோன உத்தமருக்கு நாம் காட்டிடும் 'நன்றி'க்கு அடையாளம், அவர் விட்டுப்போன கொள்கைகளை நிறைவேற்றுவதுதான். ஆனால், காங்கிரஸ்காரர்கள், அதைக் கவனிப்பதில்லை; அழகான மாலை, வெள்ளி 'கில்டு' போட்ட சட்டம், இவைகளால் அவரது படத்தைப் போட்டு மூடிவிட்டு, பகிரங்க அக்கிரமம் செய்கிறார்கள்—சட்டமும் செய்து அவரது கவுரவத்தைக் காக்க முனைவதாக வேஷம் போடுகிறார்கள்! காந்தியடிகளுக்கு, உண்மையில் மதிப்புக் கொடுக்கும் மனோபாவம் உள்ளதோ, இவர்களிடம் என்று பார்த்தால், எல்லாம் வேஷமாகவே தெரிகிறது!!

★

மீன் மழை!

மீன், மழையாகப் பெய்ததாம்! எங்கே? எங்கே! என்று கேட்கக் கூடும், மீன்மீது, உயிரையே வைத்திருப்பவர்கள். பெய்தது, இங்கல்ல; ஐக்கிய மாகாணத்திலுள்ள காஜியாபாத் எனுமிடத்தில் எப்படி இந்த 'மழை' பெய்தது, வானத்திலிருந்து மீன்கள் சொட்டக்காரணமென்ன என்பதுபற்றி சர்க்கார் ஆராய்ச்சி நடத்தியதா என்றெல்லாம் டில்லிப் பார்லிமெண்டில் இந்த கிழமை கேள்விகள் கிளப்பப்பட்டன. இதுபோல வங்காளத்தில் அடிக்கடி மீன் மழை பெய்வதாகவும், அதற்குக் காரணம் கடலிலிருந்து உருவாகும் புயல் காற்றின் விளைவாக மீன்கள் வானத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு, மேகங்களோடு சேர்ந்து மழையோடு விழுவதாக டில்லி அமைச்சர் கிருஷ்ணப்பா, பதிலளித்திருக்கிறார். விடை, திருப்திகரமாகவும் விளக்கமாகவும் இல்லை என்று பலர் வற்புறுத்தியிருக்கின்றனர். இதுபற்றி, ஆராய்ச்சி செய்தால், ருசிகர செய்திகள் கிடைக்கக் கூடும்.

8-ம் பக்கத் தொடர்ச்சி

தண்ணீருக்கருகில் இருக்கும் எதையும் பிடித்துக்கொண்டு நிற்பதற்குப் பயப்படுகிறாள். இது "தண்ணீர்ப் பயம்"

*

உங்களுக்கு இருப்பது எவ்வகைப் பயமாயினும், அதை முளையிலேயே கிள்ளிவிட முயற்சி செய்யுங்கள். குழந்தைப் பிராயத்தில் பிறந்த அனுபவம், அல்லது பிற்கால அனுபவம் இவ்வாறு நீங்கள் பயந்து நடுங்குவதற்குக் காரணமாயிற்று என்று சிந்தித்துப் பாருங்கள், இப்பொழுது அவ்வாறு பயம் ஏற்படுவதற்குத் தகுந்த காரணங்கள் இருக்கின்றனவா என்று துருவி அலசி ஆராய்ந்து பாருங்கள். சிறிது சிறிதாக இப்பொழுதே அத்தகைய பயத்தைப் போக்காவிடில், வயதாகையில் அதனால் மனதில் அதிகமான உபாதை உண்டாகும். மனதைப் பயங்கொள்ளாதிருக்கப் பயிற்றுவியுங்கள். இது அத்தனை எளிதல்ல, இருந்தாலும் மறுமுறை அவ்வாறு பயப்பட நேரிடும்பொழுது அமைதியாகப் பயத்தை ஒழிக்க முயன்று சிரித்துப் பாருங்கள். நீங்கள் அவ்வாறு காரணமின்றிப் பயமடைகிறீர்கள் என்ற எண்ணமே உங்களுக்குச் சிரிப்புண்டாக்குமல்லவா?

"அறைப் பயம்" நீங்க, அதில் பிரவேசிக்கும்போதே கதவுகளையும் சுற்றுப்புறத்தையும் நன்றாகக் கவனித்துப் பாருங்கள். கதவு தானாக அடைத்துக்கொண்டுவிடும் என்று எண்ணுவதற்குப் போதிய காரணம் இல்லையென்று உங்களுக்கு நீங்களே உறுதி கூறிக்கொள்ளுங்கள். பயம் ஏற்படும்பொழுது, நீண்ட மூச்சு எடுத்து, நிதானமாக அதை வெளியே விட்டுக்கொண்டே, "மனமே பயப்படாதே" என்று, மறுபடியும் மறுபடியும் சொல்லுங்கள். இவ்வாறு செய்யும் பொழுது உங்கள் பயம் எவ்வளவு குறைந்துவிடுகிறதென்பதை அறிய நீங்கள் ஆச்சரியம் அடைவீர்கள்.

இவ்வாறு மனதைப் பயிற்றுவித்து வந்தால், எத்தகைய மனப் பிராந்தியையும் ஒழித்துக் கவலையின்றி நீங்கள் வாழலாம்.

★

பெரிதும் சிறிதும்!

★

அமெரிக்கா,

மிகப் பெரிய நாடு.

ஜப்பான்,

மிகச் சிறிய நாடு.

அமெரிக்காவை, வென்றுவிட்டது, ஜப்பான். அண்மையில் ரஷியா விட்ட இயற்கைச் சந்திரனின் விளைவாக, அமெரிக்காவும் 'ராக்கெட்' பரீட்சை நடத்தியது தெரியும். அமெரிக்க ராக்கெட், கிளம்பும்போதே, தீப்பிடித்து எரிந்து போய்விட்டதாம்! ஆரம்பமே தோல்வியில் முடிந்ததை யெண்ணி, அமெரிக்கருக்கு ஆற்றொணாத் துயரமும் வேதனையும் உண்டாகியிருக்கிறது. "ஏற்கனவே, நமக்கு உலகத்தில் கெட்ட பெயர். அதை இந்தத் தோல்வி இன்னும் அதிகமாகி விட்டது," ஒரு அமெரிக்க செனேடர் வருந்துகிறார். தோல்விக்கான காரணத்தை ஆராயுமாறு ஐசனோவர் உத்திரவிட்டிருக்கிறார். இவ்வளவு பரபரப்பான சம்பவங்கள் ஏற்பட்ட இச்சமயத்தில், அமைதியாக, ஜப்பானும் ஒரு ஆராய்ச்சியில் வெற்றி பெற்றிருக்கிறது. ஏழைக்கேற்ற எள்ளுருண்டை!—என்பதுபோல, தன்னளவுக்கு, ஒரு சிறு ராக்கெட்டைத் தயார் செய்து, பரீட்சித்து வெற்றியும் கண்டிருக்கிறது. ஜப்பானின் ராக்கெட் ஆகாயத்தில் 60 மைல் வரை சென்றதாம். இந்தப் பரீட்சையில் வெற்றி கிடைத்துவிட்டதால், அடுத்தபடி புதிய சந்திரன் அனுப்பும் முயற்சியில் முனைந்திருக்கிறார்களாம், ஜப்பானிய விஞ்ஞானிகள்.

இன்னொன்று தெரியுமா? உலகமே, ரஷியா விடுத்த புதிய சந்திரனைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்த நேரத்தில் ஜப்பானிலிருப்போர் என்ன செய்தார்களாம், தெரியுமா! ராக்கெட் விடுவது போலவும், புதிய சந்திரன் வட்டமிடுவது போலவும், ஒரே வாரத்துக்குள் ஏராளமான பொம்மைகளையும் செய்து, விற்பனை செய்தார்களாம்.

அவ்வளவு சுறுசுறுப்பும் மூளை பலமும் உள்ளது அவர்களுக்கு!!

பெரிய நாடுதான், வாழ முடியும்—சின்னஞ் சிறு நாடுகள், பெரிய நாடுகளின் பின்னால் போக வேண்டியதுதான்—என்று சில பெரியவர்கள் பேசுகிறார்களே, அது சரிதானா என்று பார்த்தால், இல்லை என்பதை எடுத்துக் காட்ட ஜப்பான் போதும். ஜப்பான் நாட்டிலே, இரும்புச் சுரங்கங்களே கிடையாதாம்! உலகத்தின் மூலை முடுக்குகளிலே அகப்படும், ஓட்டை உடைச்சல்கள், வேண்டாம் என்று வெறுத் தொதுக்கப்பட்ட கழிசல்கள் முதலியவைகளையெல்லாம் வாங்கிச் சென்று, அதை நல்ல இரும்பாக்கி பெரிய பெரிய ஆலைகளையும் இயந்திரங்களையும் தயாரிக்கிறார்கள்!

இந்தியா மிகப்பெரிய நாடுதான்—ஏராளமான இரும்புச் சுரங்கங்கள் உள்ள நாடுதான். இருந்தும், பெரிய பெரிய ஆலைகளுக்கும் இயந்திரங்களுக்கும் இன்னும் வெளிநாடுகளை 'தொண்ணாந்து' கிடக்கும் நிலையில்தான் இருக்கிறோம்.

சேலத்திலே இரும்பு இருக்கிறது! அது நல்லதா கெட்டதா, அகப்படுமா அகப்படாதா, எடுக்கலாமா கூடாதா, சேலத்துக்கு ஆதரவு தரலாமா வடக்கேயுள்ள பிலாயில் ஒரு இரும்பாலை வைக்கலாமா என்று யோசித்து எம்முடிவுக்கும் வராமல் காலந்தள்ளும் சர்க்கார் நம்முடையது! ஆனால், ஜப்பானில் இப்படியொரு சுரங்கம் இருப்பதாகத் தெரிந்துவிட்டால் போதும், என்னென்னவோ செய்துவிடுவார்கள்.

ஒதிபெருத்தென்ன!—என்று ஒரு பழமொழி உண்டு. அதைப் போல், மிகப் பெரிய நாடு—35 கோடி மக்கள் வாழ்கிறார்கள்—இமயமுதல் குமரிவரை பரந்து கிடக்கிறது—என்று பெருமையோடு பேசுவதையும், அதே பெருமையில் மூழ்குவதையுமே பெரிதென எண்ணுவதும், அதற்கென ஒரு பெரிய நாடு வேண்டுமெனக் கூறுவதும் முன்னேற்றம் காணும் பாதையல்ல.

பொங்கல் மலர்

விற்பனையாளர்களுக்கு

இந்த ஆண்டுப் பொங்கல் மலர் வழக்கம்போல் 14—1—58-ல் வெளிவருகிறது.

விலை:- எட்டணா

ஏஜண்டுத் தோழர்கள் தங்களுக்குத் தேவையான மலர் எவ்வளவென்பதை 20—12—57-க்குள் தெரிவிப்பதுடன், மலருக்குரிய தொகை முழுவதையும் (கழிவு 25% நீக்கி) 28—12—57-க்குள் இங்கு கிடைக்கும்படி அனுப்பி வைக்கவேண்டும். அதோடு டிசம்பர் பட்டியல் பாக்கி முழுவதையும் 10—1—58-க்குள் அனுப்பவேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொறுப்பாளர்.

குறிப்பு:— மலர் ஒன்றுக்கு 12 புதிய காசு கழிவு போக மீதி 38 காசு வீதம் கணக்கிட்டு முழுத் தொகையையும் அனுப்பிவைக்கவும்.

நாடு சிறிதாகயிருந்தாலும், அங்கே உள்ளவர்களின் மூளைபலமும், உழைக்கும் ஆர்வமுமே மிக மிக முக்கியம்! உழைக்கும் ஆர்வம், ஜப்பானிலிருக்கிறது. ஏனெனில், அது சிறிய நாடு. அதனால், பெரியநாடுகளோடு போட்டியிடுமளவுக்கு உழைக்கும் ஆர்வமும் அறிவும் வளர்ந்துகொண்டேயுள்ளன.

இந்தியாவை பெரிய நாடு என்று சொல்லிப் பூரிக்கிறோம். ஆனால், உழைக்கும் ஆர்வம், உண்டோ? — கிடையாது! முன்னுக்கு வரும் ஆசை உண்டோ? —கிடையாது!! இந்தியா எப்படியிருக்கிறது — என்பதற்கு, ஒரு உதாரணம் கேளுங்கள்:

காமாரியா எனுமிடத்தில், இந்திய அரசுக்குச் சொந்தமான தளவாட உற்பத்திக் கிடங்கொன்று இருக்கிறது. சமீபத்தில் அக்கிடங்கிலிருந்து பல இலட்ச ரூபாய் மதிப்புள்ள சாமான்கள் கையாளப்பட்டிருக்கிறதாம்.

கடந்த கிழமை, பார்லிமெண்டில், 'இது உண்மைதான்' என்று உதவி பாதுகாப்பு மந்திரி ரகுராமையா, ஒத்துக்கொண்டிருக்கிறார். இது, இந்தியா!!

அடிக்கடி, இப்படி ஏற்படும் சேதங்களைப்பற்றிக் கேள்விப்படுகிறோம். அந்தளவுக்குத் திறமைக் குறைவும், நிர்வாக ஊழலும், மலிந்திருக்கின்றன இந்த ஆட்சியில்.

ஆளும் நேரு அவர்களுக்கு பெரியநாட்டை ஆள்கிறோம் என்கிற 'கித்தாப்பு' ஏற்படக்கூடும்! ஆனால், அந்த நாடு எப்படியிருக்கிறது, வளமாகவா, விஞ்ஞான வளர்ச்சிபெற்றா, ஏழ்மையைத் தொலைத்தா, நிர்வாக ஊழலற்றா, என்று எண்ணுகிறபோது, பெரிய நாட்டின் அழகுபுரியும்.

பெரிது! சிறிது!! — என்பது, உருவத்தில் அல்ல; ஒரு நாடு சாதிக்கும் காரியங்களில்தான் இருக்கிறது. பெரிதாயிருப்பதாலேயே, ஒரு நாட்டுக்குப் பெருமையும் வந்துவிடாது! சிறிதாகயிருப்பதாலேயே ஒருநாடு செத்தும் விடாது!!

★

பேரறிவாளர்களே!

—[★]—

4—12—57 அன்று சென்னை மெமோரியல் கூடத்தில் சர். சி. பி. ராமசாமி, 'சிம்சன்' அனந்தராம கிருஷ்ணன் முதலியோர் கலந்துகொண்ட செஞ்சிலுவை சங்க விழாவில் பேசியபோது **சி. என். ஏ.** விடுத்த ஒரு வேண்டுகோள்:—

"இந்த நாட்டில் சாதிப் பாகுபாடுகளை நீக்குவதற்கு எல்லாப் பேரறிஞர்களும் ஒன்று சேர்ந்து அதற்கான மார்க்கத்தைக் காண முயலவேண்டும். 'துரதிருஷ்ட வசமாக' இந்த நாட்டில் ஒரு குறிப்பிட்ட மக்களிடம் —ஒரு குறிப்பிட்ட கட்சியிடம்— ஒப்படைக்கப்பட்டிருக்கிறது அந்த சாதி ஒழிப்பு வேலை.

"நான் வலியுறுத்திக் கூறுவதெல்லாம், ஒரு குறிப்பிட்ட கூட்டத்தார்தான் அந்த வேலையைச் செய்யவேண்டுமென்றால்- அவர்கள் மட்டுமே ஒருபுறம் அந்த வேலையைச் செய்துகொண்டிருந்து, மற்றவர்கள் ஒதுங்கியிருந்துவிட்டால் இருசாராருக்கிடையில் துவேஷம் ஏற்படத்தான் செய்யும். அந்த துவேஷம் காரணமாகத் தங்களுக்கு என்ன சாதகம் கிடைக்குமென ஆராயும் அரசியல் கட்சிகளும் இருக்கத்தான் செய்கின்றன. நல்ல வேளையாக, மக்களிடையே குரோத உணர்ச்சி ஒழிய வேண்டுமென விரும்புபவர்களும் இன்னும் இருக்கிறார்கள்; அவர்களையெல்லாம் நாம் இந்த நல்ல காரியத்துக்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

"அரசியல் கட்சியையும் கடந்த பேரறிவாளர்கள் கூடி, இந்தத் தலைமுறையிலேயே செய்யவேண்டியுள்ள ஒன்று இந்த சாதி ஒழிப்பு வேலைதான்.

"குலத்திலே பல வேறுபாடுகள்; ஏழை-பணக்காரன் என்ற பாகுபாடுகள்; முதலாளி-தொழிலாளி என்ற வேற்றுமை; ஒரே ஊரிலே கிழக்குத் தெருவிலிருப்பவருக்கும் மேற்குத் தெருவிலிருப்பவருக்கும் பகை— இவற்றையெல்லாம் இன்று ஏட்டிலே காணமுடியவில்லை: நாட்டிலே காணமுடிகிறது.

"'தீயினால் உடலிலே சுட்ட புண் ஆறிவிடும்; ஆனால் நாவினால் உள்ளத்தைச் சுட்ட வடு ஆறாது' என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார். செஞ்சிலுவைச் சங்கம், மக்களின் உடலில் மட்டுமல்ல — உள்ளத்தில் ஏற்பட்டுள்ள புண்ணையும் போக்க முயலவேண்டும்; சாதியின் காரணமாக் உள்ளத்தில் ஏற்படும் தழும்பை அகற்ற வேண்டும். உள்ளத்தில் ஏற்பட்டுள்ள இந்தப் புண் நமக்கு மட்டுமல்ல —நம் குழந்தைகளையும் பாதிக்கக் கூடியவை.

“அறிவாளிகள், கூட!”

— பழநி —

ஆச்சரியம் தெரிவித்திருக்கிறார், அண்மையில் இங்கே 'இறக்குமதி' செய்யப்பட்ட, இந்தியப் பிரதமர் நேரு அவர்கள்.

சில அறிவாளிகளும் கூட 'வடக்கு, தெற்கு' என்று பேசுகிறார்களாம்! நாட்டுப் பிரிவினை தேவையென்று, 'சில அறிவாளிகளும்கூட' சொல்லுகிறார்களாம்!!

பைத்தியக்காரர்கள் — காட்டுமிராண்டிகள் —முட்டாள்கள், ஆகியோரின் முழக்கமென்று வர்ணிப்பது நேருவின் வாடிக்கை. இம்முறை, 'அறிவாளிகளும் கூட' ஆதரிக்கும் உண்மையை உணர்ந்து, அதற்காக ஆச்சரியம் தெரிவித்திருக்கிறார்!!

அறிவாளிகளும்கூட, ஏன், தனிநாடு கோரிக்கையை ஆதரிக்கிறார்கள்?—என்கிற அடிப்படை உண்மையை அறிய நேரு அவர்கள் அக்கரை கொள்ளவில்லை. உண்மையை அறிந்தால், தானும் அவர்களில் ஒருவராக ஆகிவிடக் கூடும்! ஆனால், அதிகாரம் என்கிற திரை, அவருடைய கண்களை மூடிக்கொண்டிருக்கிறது — அதனால், ஏகஇந்தியா, என்கிறார்— இமயமுதல் குமரி வரை ஒன்று என்று உரைக்கிறார்—இதயத்தில் பெரியதோர் ஆசையை வைத்துக்கொண்டு, அதைப் பிறர் இடித்துரைக்கும் போதெல்லாம் எச்சையும் பேச்சையும் கொட்டுகிறார்.

அறிவாளிகள்கூட!—ஏன், ஆதரிக்கிறார்கள், தனி நாடு இலட்சியத்தை? சுருக்கமாகச் சொல்லிவிட முடியும் பதில், அவர்கள் அறிவாளிகள், ஆதலால் என்று!! இதனால், நேரு போன்றோரை, நாம் ஏளனமாகவும் கேலியாகவும் கருதுவதாக எவரும் எண்ணக் கூடாது. நேரு அவர்கள், இந்தத் தலைமுறையின் ஒப்பற்ற சிற்பி. ஆனால், அவர் கண்களை, திரை மூடியிருக்கிறது. ஆதிக்கம் என்கிற திரை!! அதனால், தனிநாடு கேட்கும், நமது குரலின் வலிவை மதிக்கத் தெரிகிற அளவுக்கு, உண்மையின் சக்தியினை உணரும் கட்டம் உள்ளத்தில் உண்டாகவில்லை. தானே உண்டாக்கிக் கொண்டிருக்கும் 'ஏக இந்தியா' என்கிற போலி மயக்கத்தை விட்டு, வெளியேறவும் விரும்பவில்லை அவர். ஒரு சில காங்கிரஸ் தலைவர்கள் கூறுவது போல, பாரதமாதாவின் கூந்தல் இமய மலையிலும், காலடி குமரியிலும் இருப்பதாக இவரும் கருதிக் கொண்டு பேசுகிறார்!!

பாரத மாதா, பெண்ணுருவிலும் இல்லை—அவளுக்குப் பங்கம் விளைவிக்கும் கௌரவர்களாகவும் நாமில்லை. இந்தத் தலைமுறையில் அன்பையும், பலாத்காரமின்மையையும் வளர்த்து அதன் மூலம், அரசியல் இலட்சியத்தை அடைய முயற்சிப்பவர்கள் நாம். ஆகவே, பிறரைத் துன்புறுத்தவோ, வடநாட்டவர் யாவரையும் வெட்டி வீழ்த்திவிட்டு, இரத்தக் குளத்திலே மிதந்து சென்று இலட்சியபுரியை அடைந்திடும் எண்ணங் கொண்டவர்களோ, அல்ல நாம்.

வாழ, தனி நாடு கேட்கிறோம்! வம்பை வளர்க்க அல்ல!!

நாம் கேட்கும் தனிநாடு கிடைத்ததும், 'ராக்கெட்டு'களையும் 'அணுகுண்டு'களையும் பெருக்கி எடுத்துக்கொண்டு, டில்லிக்குப் போய், நமக்கு தீங்கிழைத்தவர்களையெல்லாம் தேடிப் பிடித்து அழிப்பதற்காகவல்ல, நாம் தனிநாடு கேட்பது. அண்ணன்மாரே! அண்ணன்மாரே!!—என்று உலக மக்களையெல்லாம் பார்த்து அழைக்கும் அன்பும், பண்பும் வளரும் இந்த யுகத்தில், இவ்வளவு அருவருக்கத்தக்க அரசியல் நெறியை ஒருநாளும் பின்பற்றாது, திராவிட முன்னேற்றக் கழகம். புதிதாக அமையப்போகும் திராவிடத்தின் துவக்க விழாவுக்கு இதே நேரு பண்டிதர் அவர்களை அழைத்து, மாலைகள் சூட்டிடும் கட்டம் ஏற்பட்டாலும் ஏற்படுமே ஒழிய—ஒரு சிறு கல்லினைக்கூட, அவர்மீது வீசமாட்டோம்!

தென்னகம் வீரத்திலே மட்டுமல்லாமல் ஈரம் காட்டுவதில்கூட, எப்போதும் பேர் பெற்ற மண்.

நாளை, திராவிட நாடு பெற்றதும், அதைத் தனியாக வெட்டியெடுத்துக்கொண்டு, சகாரா பாலைவனத்துக்கு ஓடிவிடப் போவதில்லை, நாம். இங்குதான், வாழப் போகிறோம். நேருவுடனும், பந்துடனும், அஜாய் கோஷுடனும், ஆச்சாரிய கிருபளானியுடனும் உறவு கொண்டே வாழ்வோம.

தெளிவாகச் சொல்ல வேண்டுமானால் இப்போதிருப்பதைவிட, இன்னும் நல்ல முறையில், உளவன்பும் உறவும், அப்போதுதான் பரவ வழியிருக்கிறது! ஒரு சமயம் வெள்ளையன் என்றால் வெறி கொண்டு பேசினார்கள், காங்கிரஸ்காரர்கள். வெள்ளையர்களும், சுயராஜ்யம் கிடைத்தால் இந்தியா தங்களை மதிக்காமற்போய்விடுமோ என்று அஞ்சியதுமுண்டு. ஆனால்,

என்ன காண்கிறோம் இன்று? முன்பைவிட இப்போது, இந்தியாவும் இங்கிலாந்தும் நேசமும் பாசமும் காட்டி வாழ்கின்றது! அட்லீ வருகிறார்—பெவான் வந்து போகிறார்—பெதிக்லாரன்ஸ் வருகை தருகிறார் — இவர்களையெல்லாம், நேரு அடித்து விரட்டவில்லை; மாறாக மலர்மாலையும் வரவேற்பும் வழங்கப்படுகிறது -- இருதரப்பினரும் உள்ளம் ஒன்றி உறவுகாட்டிப் பழகுகின்றனர்.

சுயராஜ்யம், முகிழ்க்காது போயிருக்குமாயின் இந்தச்சுமுகம் ஏற்பட்டிருக்க முடியுமோ! எதிர்க் கட்சிகள் மறுத்துச் சொன்னாலும் கூட, இதே நேருவன்றோ இங்கிலாந்தின் நேசம் தேவையென்று வலியுறுத்துகிறார்!!

புலியும் புள்ளிமானும் போல இருந்தால், அன்பும் நேசமும் உருவாகாது. இரண்டும் புள்ளிமானாகிடவேண்டும். சரிசமம் — தனியரசு — தனக்கும் மதிப்பு — என்கிற ஒரு நிலைமை உருவாகிவிட்டால், ஏய்ப்போரும், ஏமாறுவோரும் இருக்கமாட்டார்கள்! அப்போது, அன்பு, மலரும், அமைதி தவழும்; உலகநெறி தழைக்கும்; அதைவிட்டு, எலியும் பூனையும்போல இருக்குமட்டும், நட்பும் சரி பாசமும் சரி, ஒருபோதும் வளரவும் வளராது; நன்னெறி ஏற்படவும் வழியிருக்காது.

சில, அறிவாளிகளும் கூட, என்று வியக்கிறார், நேரு! அவர் மறந்துவிட்டார், அறிவுக்கு முதலிடம் தருவதை முக்கிய நோக்கமாகக் கொண்டது நமது கழகம் என்பதை!! ஆசிரியர்கள், மாணவர்கள், எழுத்தாளர்கள், இளைஞர்கள் அத்துணைபேரும் நமது கூடாரத்தில், ஏன் உலவுகின்றனர்? இந்த மண்ணில் உலவும் ஏனைய கட்சிகளைவிட, ஏன் திராவிட முன்னேற்றக் கழகத்திடம் பாசமும் பற்றும் காட்டுகின்றனர்? நாம், அறிவுக்கு ஒவ்வாத பாதையில் செல்லவில்லை — அறிவு ஏற்றுக் கொள்ளாத எதையும் செய்யும்படியும் மக்களைத் தூண்டுவதில்லை. அதனால், 'அறிவை' துணைகொள்வோர் அனைவரும், நமது பாதைக்கு வருகிறார்கள்—வாழ்த்தளிக்கிறார்கள்.

சரித்தைக் காட்டி நேரு அவர்கள் சொன்னாராம் ஒரு நிகழ்ச்சியை. டாக்டர் இராதாகிருஷ்ணன், அண்மையில் மங்கோலியாவுக்கு 'விஜயம்' செய்தபோது, அங்கே 'சாம்பு' என்கிற பெயர் பிரபலமாயிருப்பதைக் கண்டாராம். எப்படி இந்தப் பெயர் இங்கே வந்தது என்று கேட்டபோது, ஆதியில் மங்கோலியாவுக்கு இந்தத் துணைக்கண்டத்திலிருந்து சென்ற ஒருவர் மூலமே மங்கோலிய இனம் உருப்பெற்றதாக உரைத்தார்களாம், அங்கு. அப்படிப்பட்டவர்கள், நாம்! ஒரு காலத்தில் வெளியிடங்களுக்கெல்லாம் சென்று புகழை நாட்டியவர்கள், நாம்! ஏன் வீழ்ந்தோம்? ஆங்கிலேயர் நுழைந்த பிறகுதான்—என்று பேசியிருக்கிறார் நேரு. அந்தப்பேச்சை வெளியிட்ட 'தினமணி' ஏடு — சாம்பு என்கிற பெயர் தமிழ்நாட்டில்தான் உண்டு —என்று 'பிராக்கெட்' கட்டி ஒரு குறிப்புப்போட்டிருக்கிறது. சாம்பு எனும் பெயர் தமிழகத்திலிருந்து மங்கோலியர்வுக்குப் போனதோ என்னவோ, யாமறியோம்! ஆனால் தமிழகத்து முத்தும், அகிலும், துகிலும், பட்டும், மிளகும், ரோமாபுரியும் கிரேக்கமும் போட்டியிட்டுக் கொண்டு வாங்குமளவுக்கு பெரும் புகழ் பரப்பி இருந்தன என்று சரிதங்கள் தெரிவிக்கின்றன — முடியுடைமூவேந்தர்கள், கடல் கடந்தும், தமது வெற்றிகளைப்பொறித்தார்கள் எனும் நிகழ்ச்சிகளை நமது ஏடுகள் செப்புகின்றன. அவ்வளவு சிறப்புடனிருந்த வாழ்வு டில்லி உருவாகத் துவங்கி அங்கிருந்தபடி **அகில இந்தியா** என்பதையும் உருவாக்கி, ஆண்ட ஆங்கிலேயரின் காலத்தில், ஒரே **நாடாக** ஆகும் நிலை ஏற்பட்டது. தான் அமைத்துத்தந்த அந்த ஏக இந்தியாவை, வெள்ளையன் இவர்களிடம் விட்டுச் சென்ற இந்தியாவை, வைத்துக்கொண்டு கொடி கட்டி ஆள நினைக்கிறது டில்லி! நாம், கூடாது, எமது பழைய வாழ்வு வேண்டும் என்று கேட்கிறோம்! ஏடுகளிலும், நாம் கூறுகிற உண்மையைப் பார்க்கும் படித்தவர்கள், "சரிதானே! இவர்கள் சொல்வது!" என்று உணர்ந்து நமது வரிசையில் வந்து நிற்கிறார்கள்.

*

டில்லியின் ஆட்சியால், தென்னாடு கெடுகிறது, என்று நாம் கூறி வருகிறோம். அதனையும், இல்லை என்று மறுக்கும் கட்டத்தில் எவரும் இல்லை. மாநிலத்தையாளும் மந்திரிகளே ஒரோர் சமயம் இந்த உண்மையை, வயிற்றெரிச்சலுடன் ஒப்புக்கொள்ளும் கட்டம் தான் உள்ளது. மறைந்த குமாரசாமிராஜா அவர்கள், குமுறியபடி ஒரு சமயம் தெரிவித்தாரே, 'வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது' என்று. என்ன பொருள் அதற்கு? நாம் கூறுவது உண்மை, என்பதுதானே! உண்மையும் அறிவும் இருப்பதால் தான், எக்கட்சியிலும் சேராத, ஆற்காடு இராமசாமியார் கூட அண்மையில் காஞ்சி நகரசபை வரவேற்பில் பேசியபோது, மாகாணங்களைப் பிச்சையெடுக்கும் கட்டத்தில் வைத்து வருகிறது என்றார் வேதனையோடு! முன்னாள் கவர்னர் ஜெனரலாக இருந்த ஆச்சாரியார், அடிக்கடி ஆயாசப்பட்டு

பொங்கல் மலர்

சந்தாதாரர்களுக்கு

இவ்வாண்டுப் பொங்கல் மலரின் விலை ஐம்பது (0—8—0) காசு. எனவே சந்தாதாரர்கள் மலருக்கெனத் தனியாகப் பணம் எதுவும் அனுப்ப வேண்டியதில்லை.

மலரைப் பதிவுத் தபால் மூலம் பெற விரும்புவோர் மட்டும் ஐம்பது காசு (0—8—0) அனுப்பினால் போதும்.

பொறுப்பாளர்.

வடக்கின் வஞ்சனைபற்றி எடுத்துரைத்திடக் காரணம் என்ன? வடக்கு வளர்கிறது! தெற்கு தேய்கிறது!—என்கிற உண்மை, அவர்கள் உள்ளத்திலும் உறைக்க ஆரம்பித்ததால்தான். இந்த உண்மையினை படித்தவர்கள் மட்டுமின்றி' பாமரரும் உணருவதால்தான் நமக்கு, நாட்டில் 17-இலட்சம் ஓட்டுகள் கிடைத்தன. படைவரிசைபோல, வரவர, ஆதரவும் பெருகிக்கொண்டேயிருக்கிறது.

நேரு அவர்கள், அறிவாளிகள் கூட ஆதரிக்கிறார்களே என்று ஆச்சரியம் தெரிவித்துப் பேசியதற்கு மறுநாள் மதுரையில்ஒருவர்

"பரதவர் நிலையை உயர்த்த கடற்கரையோரமுள்ள ராஜ்யங்களுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதை நினைத்து, நாங்கள் ரூ 140-லட்சம் கேட்டோம்; 80-லட்சம்தான் தரமுடியுமென்று டில்லி கைவிரித்து விட்டது. சென்னைக்கும் இதே மாதிரி அனுபவம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. எனவே 2-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமக்கு நியாயமான பங்கு பெற தென் ராஜ்யங்கள் சேர்ந்து முயற்சிக்க வேண்டும்" என்று சொல்லியிருக்கிறார்.

வேறுயாருமல்ல இப்படிச் சொல்லியது. கேரள கல்வி மந்திரியான தோழர், முண்டசேரி. ராஜ்யங்களுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது; ஆனால் கேரளத்துக்கும் சென்னைக்கும் அந்த அதிக நிதி கிடைக்கவில்லை, என்கிறார் கேரள அமைச்சர்! என்ன பொருள்? பம்பாய்க்கும் வங்கத்துக்கும் கிடைக்கும் சலுகை நமக்கு வழங்கப்படவில்லை என்பதுதானே! அவர், ஒருகம்யூனிஸ்டு—ஏக இந்தியாவுக்கு பலம் தேடுகிறவர். ஆயினும், சந்தர்ப்பம் குத்தும்போது, தன்னையறிந்தோ அறியாமலோ, தென்னரசுகள் சேர்ந்து முயற்சிக்கவேண்டும் குற வார்த்தை வரத்தான் செய்கிறது! இதைப் பார்த்து, ஆச்சரியமடைந்துவிட்டால் போதுமா? ஏன் இந்த நிலை என்பதையன்றோ நேரு அவர்கள் எண்ணிப்பார்த்திடல் வேண்டும்!!

இதே கிழமையில் விருதுநகரிலுள்ள வர்த்தக சங்கக் காரியதரிசி நித்தியானந்தம் என்பவர், வேண்டுகோள் விடுத்திருக்கிறார் சென்னை சர்க்காருக்கு.

"உணவுப் பொருளான துவரம் பருப்புடன் கேசரி பருப்பு கலக்கப் படுகிறதென்றும், மேற்படி பருப்பைச் சாப்பிட்டால் பக்கவாத நோய் வருமென்றும் அண்மையில் மந்திரி பக்தவத்சலம் கூறியது யாவருக்கும் தெரியும்.

இதனால், கேசரி பருப்பு இங்கு வரக்கூடாது என்று தடையும் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், வடநாட்டு வர்த்தகர்கள், கேசரி பருப்பை மட்டும் அனுப்ப முடியாததால் நல்ல துவரம் பருப்புகளோடு மேற்படி பருப்பையும் கலந்து இங்கு அனுபபுகிறார்கள். இதனால், கலப்படப் பருப்பு சகாயமான விலைக்குக் கிடைக்கிறது. ஐக்கியமாகாணம்மத்தியமாகாணம் முதலிய இடங்களிலிருந்து வரும் இந்த மூட்டைகளை வராமல் தடை செய்யவேண்டும். அப்போது தான், நாங்கள் நஷ்டமடையாமலிருக்க முடியும்."

வடநாட்டுப் பருப்புக்குத் தடை விதிக்க வேண்டுமென்கிறார்! ஏன்? வியாபாரம் கெடுவதால்!!

"ஆகா—தடையா போடச் சொல்கிறாய். நீயும் ஒரு தி. மு. க.வா?" என்று இவ்விதம் கேட்டவர் மீது பாய்ந்துவிட்டால்போதுமா? தனக்குப்பாதுகாப்புக் கேட்கிறார்—அதனால்தடைபோடச் சொல்லுகிறார் இப்படி, அமைச்சரானாலும் வியாபாரியானாலும், பாதிக்கப் படும் போது அதிக சலுகை, தடை போடு என்கிற கோரிக்கைகளைக் கோருகிறார்கள்.

இதையெல்லாம் மொத்தமான உருவில் கோரும், இலட்சியம் தான் நாம் தனியரசு, கேட்பது.

அதனால்தான், அறிவாளிகளும் கூட மெள்ளமெள்ள, நம்பக்கம் வருகிறார்கள்—நமக்கு வாழ்த்துக் கூறுகிறார்கள்! இதைப்பார்த்து நேரு போன்றோர், வருந்திப் பயனில்லை—கண்களை மூடிமறைக்கும் ஆதிக்கத்திரையைச்சற்று அகற்றி விட்டுப் பார்த்தால், நமது கோரிக்கையின் உண்மைப் பொருள் விளங்கும்!!

புதியதோர் அமைப்பை, துவக்கி வைத்த, பெருமையும் அவருக்குக் கிடைக்கும்.

★

குறைந்த விலையில்! சிறந்த முறையில்!!

"திராவிட நாடு"

பொங்கல் மலர்

சி. என். அ.

தரும்

கருத்துப் படையல்கள்

வண்ண முகப்புடன்

எண்ணத் தொகுப்புகளுடன்

ஜனவரி 14-ந் தேதி எங்கும் கிடைக்கும்

விலை 8-அணாதான்!!

"வெற்றி வீரர்கள்!"

"விகடன்", ஒரு கேலிச் சித்திரம் போட்டுள்ளது.

பிர்லாவும், டாடாவும் பெருமிதமாகப் பண மூட்டைகளைக் கையிலேந்தியபடி வருகின்றனர். அவர்களைப் பார்த்து நேருவும், பந்தும், நந்தாவும், டி. டி. கே.-யும் திகைத்து நிற்கின்றனர்.

படத்துக்குத் தலைப்பு, 'வெற்றி வீரர்கள்', என்பது. விகடனா? - என்பீர்கள்! ஆம், விகடனேதான் இப்படியொரு சித்திரம் போட்டுக் காட்டுகிறது!!

* * *

ஆடம்பரமும், விளம்பரமும், ஏடுகளின் பிரச்சாரமும் கலக்க அதிவிமரிசையோடு, கடன் வாங்கக் கிளம்பிச் சென்றார் டில்லி நிதி மந்திரி கிருஷ்ணமாச்சாரி. வெறுங் கையுடன் திரும்பி வந்தார்! "ஏனய்யா, இதற்குத்தானா போனீர்?", என்று கேட்டபோது, "நான் எதையும் எதிர்பார்த்துப் போகவில்லை. ஆகவே, எனக்கு எவ்வித ஏமாற்றமும் இல்லை", என்று சாமர்த்தியமாகப் பதில் தந்தார். எதிர்பார்த்துப் போனாரா, இல்லையா — என்பது இவர் அமெரிக்காவில் எப்படியெல்லாம் கடன் கேட்டுக் கெஞ்சினார் என்பதிலிருந்து விளங்கும். நாடே முழுகிவிடப் போகிறது! கம்யூனிசம் புகுந்துவிடும்! நல்லவர்களே, உதவுங்கள்!—என்றெல்லாம், ஓலமிட்டார். உரக்கப் பேசினார். கெஞ்சினார். எனினும், அமெரிக்கா, பட்டை நாமத்தைக் குழைத்துப் போட்டுத் திருப்பி அனுப்பி விட்டது.

ஆனால், அவர் சென்றிருந்த காலத்திலேயே, அதே அமெரிக்காவுக்குச் சென்றிருந்தார், பிர்லா. அவரும், கடன் கேட்பதற்குத்தான் போயிருந்தார். பிர்லா, டில்லியில் ஒரு மந்திரியல்ல. பெரிய முதலாளி. அவர், டி. டி. கே. - யைப் போல வெறுங் கையுடன் வரவில்லை. பணமூட்டை பெற்று வந்திருக்கிறார்! டாடா, பிர்லா போன்றவர்களின் ஆலைகளுக்கெனக் கிட்டத்தட்ட 15 கோடிக்குமேல், அமெரிக்கா கடன் கொடுத்து உதவியிருக்கிறதாம்!!

அமைச்சரால் சாதிக்க முடியாததை ஒரு முதலாளியால் சாதிக்க முடிகிறது.

எனவேதான், விகடன், அமைச்சர்கள் எல்லாம் மூக்கின்மேல் விரல் வைத்தபடி திகைப்பதாகவும், பிர்லாவும் டாடாவும் பெருமித நடைபோடுவதாகவும் படத்தில் சித்தரிக்கிறது!!

அமெரிக்கா, முதலாளிகளுக்குப் பணம் கொடுத்து உதவுகிறது. ஆனால், இந்திய சர்க்காருக்கு உதவியளிக்க 'மௌனம்' காட்டுகிறது.

என்ன காரணம்?—அமெரிக்கா, முதலாளிகளின் கையைப் பலப்படுத்த, விரும்புகிறது! வடநாட்டு முதலாளிகளுடன் — அமெரிக்க முதலாளித்துவம் கைகோர்த்து வாழ முயலுகிறது!! அரசாங்கத்தைவிட, முதலாளிகளே உற்ற நண்பனாகப்படுகிறது, அமெரிக்காவுக்கு.

இப்படி முதலாளித்துவத்தின் கை வலுப்படுத்தப்படுவது, நல்லதா? எனில், ஒருபோதும் ஒரு சுதந்திர நாட்டுக்கு, ஏற்றது அல்ல என்போம்! இப்படியொரு நிலை ஏற்படும் என்பதால்தான், இந்தச் சுதந்திரம், வடநாட்டு முதலாளிகளும் வெளிநாட்டு முதலாளிகளும் சேர்ந்து கொண்டு மக்களைச் சுரண்டத் தூண்டும், 'சுதேசி சுரண்டல் ஏற்பாடு' என்றனர் அறிஞர்கள்!!

சர்க்கார் வேண்டுகோள் விடுப்பதைவிட, முதலாளிகள் விருப்பம் தெரிவித்தால், அந்நியரின் 'முதல்' வெகு வேகமாக வருகிறது. பல வெளிநாடுகளிலிருந்து, பல ஆலைகளையும் தொழிற்சாலைகளையும் கூட்டாக நிர்வகிக்க, பல விதமான உதவிகள், ஆலையரசர்களுக்குக் கிடைக்கின்றன; ஆனால் அரசுக்குக் கிடைப்பதில்லை.

* * *

உள்நாட்டிலுள்ள முதலாளிகளுக்கு ஊக்கமூட்டி அவர்கள் கைகளைப் பலப்படுத்துவதன் மூலம் முதலாளித்துவத்துக்கு ஆக்கம் தேட முனைகிறது, அமெரிக்கா! அமெரிக்காவைப் பொறுத்தவரையில், இது சிறந்த ராஜ தந்திரமாகக் கூடக் கருதப்படலாம். ஆனால், இந்தியாவின் புகழுக்கு, எதிர்கால வாழ்வுக்கு இது ஆக்கமளிக்குமா?

புலியும் பசுவும் ஒன்றாக இருப்பதுதான் எமது 'மாடல் சோஷியலிசம்' என்கிறார் நேரு! பசு, வாடுகிறது, உதவியின்றி. அதே சமயத்தில் புலிக்கு, நல்ல தெம்பு தரப்படுகிறது, அமெரிக்காவால். புலிக்குப் பலம் ஏற்பட ஏற்பட, மக்களுக்கு மட்டுமல்ல, அரசுக்கும் ஒரு நாள் ஆபத்து இருக்கவேயிருக்கிறது! நேரு, இதை அறியாதவரல்ல. ஆயினும், எப்படியாவது பணம் எதன் மூலமாக வந்தாலும் இங்குதானே வந்து செலவழிக்கப்படப்போகிறது எனக் கருதுகிறார். அதோடு, பிர்லா டாடா போன்றவர்களுக்குத் 'தடை' போடவும் முடியாது அவரால். தேர்தலுக்கு அவர்கள்தானே பணம் தருகிறார்கள்!! ஆகவே, முதலாளிகள், வீர பவனி நடாத்துகின்றனர்—அமைச்சர்கள் தொங்கிய முகத்தோடு நிற்கின்றனர்.

இப்படியொரு நிலைமை, முதலாளித்துவத்துக்குக் கிடைப்பது நல்லதல்ல. இப்பொழுதே ஆளும் அரசை, பணதிக்கம், சரணடையச்செய்து வருகிறது. இன்னும் அதன் கைபலமாகுமேயானால், ஏழைகள் வாழ்வு குலையும் — புலி உப்பும்; பசு மெலியும். இந்த நோக்கத்துடன்தான் அமெரிக்கா, முதலாளிகளிடம் பரிவு காட்டுகிறது! ஆனால் நேரு அரசு இதைப் புரியாததுபோல் நடந்துகொள்ளுகிறது!!

காஞ்சீபுரம், 25, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில் ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.